உ

கடவுள் துணை.

பல வித்துவான்கள் இயற்றிய

பாடல்களைக் கொண்ட

விவேக சிந்தாமணி

மூலமும் உரையும்.

OFFICE OF THE REGISTRAR
26 MAR 1928
MADRAS

பல நன்னூல்களின்

ஆசிரியர்

ஸ்ரீமான் ச. தா. மூர்த்தி முதலியார்

அவர்களால்

பார்வையிடப்பெற்று

இரங்கூன்

நவீன கதா புத்தகசாலையாரால்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1928 [அணா 4.

O—,1x
N28

MADRAS
P. R. RAMA IYAR AND CO.,
PRINTERS

221
170[1]

59036

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 MAR 1928
MADRAS

உ

கடவுள் துணை.

விவேக சிந்தாமணி

மூலமும் உரையும்.

கடவுள் வணக்கம்.

அல்லல்போம் வல்வினைபோம் அன்னைவயிற் றிற்பிறந்த
தொல்லைபோம் போகாத் துயரம்போம்—நல்ல
குணமதிக மாமருணைக் கோபுரத்துண் மேவுங்
கணபதியைக் கைதொழுதக் கால்.

இ-ள். திருவருணைக் கோபுரத்துள் எழுந்தருளப்பெற்ற விநாயகக்கடவுளை, பக்தியோடு வணங்கிக் கரங்களால் அஞ்சலி செய்யில், சகல துன்பங்களும் நீங்கும்; வலிய ஆணவமலச் சேஷ்டையு மொழியும்; இம்மையிற் றாய்வயிற்றிற் கருத்தரித்துப் பிறந்ததற்குக் காரணமாய்நின்ற பிராரத்வ வினையுமகலும்; இப்பிறப்பில் தேடப்பட்ட ஆகாமிய வினைகளும் போகும். எ-று.

பயனில்லாதன.

ஆபத்துக் குதவாப் பிள்ளை யரும்பசிக் குதவா வன்னந்
தாபத்தைத் தீராத் தண்ணீர் தரித்திர மறியாப் பெண்டீர்
கோபத்தையடக்கா வேந்தன் குருமொழி கொள்ளாச்சீடன்
பாபத்தைத் தீராத் தீர்த்தம் பயனில்லை யேழுந் தானே.

இ-ள். ஆபத்துக்குதவாத பிள்ளையும், அரிய பசிக்குதவாத வன்னமும், தாகவெப்பத்தைத் தீர்க்காத தண்ணீரும், வறுமைத் தன்மையை அறியுமாற்ற லில்லாத மனைவியும், கோபத்தைத் தணித்துக்கொள்ளாத வரசனும், ஆசாரியருபதேசித்த மொழிகளைக் கொள்ளாத மாணாக்கனும், பாவங்களைத் தீர்க்காத தீர்த்தங்களுமாகிய இவ்வேழினாலும் பயனில்லை. எ-று. (1)

உலக வழக்கு.

பிள்ளைதான்வயதின்மூத்தாற் பிதாவின்சொற்புத்திகேளான்
கள்ளினற் குழலாண் மூத்தாற் கணவனைக் கருதிப் பாராள்
தெள்ளற வித்தை கற்றாற் சீடனும் குருவைத் தேடான்
உள்ளநோய் பிணிக டீர்ந்தா லுலகர்பண் டிதரைத் தேடார்.

இ-ள். மைந்தன் வயது முதிர்ந்தபின் தந்தை சொற்புத்தி கேளான்; மதுமலர்க் கூந்தலையுடைய மனைவி முதிர்ந்தபின் தன் கணவனை மதிக்கமாட்டாள்; மாணாக்கன் தெளிந்து குற்றமறக் கல்வியைக் கற்றுக்கொண்ட பின் ஆசிரியரைத் தேடான்; உலகத்தோர் தங்களுக்குற்ற வியாதி நீங்கியதும் வைத்தியரைத் தேட மாட்டார்கள். எ-று. (2)

குலக்குண மாறாமை.

குக்கலைப் பிடித்து நாவிக் கூண்டினி லடைத்து வைத்து
மிக்கதோர் மஞ்சள் பூசி மிகுமணஞ் செய்தா லுந்தான்
அக்குலம் வேற தாமோ வதினிடம் புனுகுண் டாமோ
குக்கலே குக்க லல்லாற் குலந்தனிற் பெரிய தாமோ.

இ-ள். புனுகுப்பூனை வசிக்கத்தக்க கூட்டினில் நாயைப் பிடித்து அடைத்துவைத்து அதற்கு மேன்மையான மஞ்சள் முதலிய வாசனைகள் பூசி அதிக மேன்மை செய்தாலும் அது ஜாதியில் வேறாகுமோ? அதினிடம் வாசந் தங்கிய புனுகுண்டாகுமோ? நாய் நாயேயன்றி ஒருகாலும் உயர்குலமாக மாட்டாது. எ-று. (3)

விருந்தின் தாரதம்மியம்.

ஒப்புடன் முக மலர்ந்தே யுபசரித் துண்மை பேசி
உப்பிலாக் கூழிட் டாலு முண்பதே யமிர்த மாகு
முப்பழ மொடுபா லன்ன முகங்கடுத் திடுவா ராயின்
கப்பிய பசியி னோடு கடும்பசி யாகுந் தானே.

இ-ள். யாவரும் ஒப்பத்தக்க முகமலர்ச்சியோடு உபசாரஞ் செய்து உண்மையான மொழிகளைப்பேசி உப்பிலாக் கூழை வார்த்தாலும் அது உண்பவருக்கு அமிர்தமேயாகும்; மா, பலா, வாழை முதலிய முப்பழங்களோடு உயர்ந்த அன்னத்தை அன்பிலாது முகங்கடுத்து ஒருவர்க் கிடுவாராகில் அவை யுண்டவர்க்கு உள்ள பசியினும் மிகுபசியை உண்டாக்குமல்லாமல் தணிக்காது. எ-று. ()

கடலிற்பெய்த மழை.

கதிர்பெறு செந்நெல் வாடக் கார்க்குலங் கண்டு சென்று
கொதிதிரைக்கடலிற்பெய்யுங் கொள்கைபோற்குவலயத்தே
மதிதனம் படைத்த பேர்கள் வாடினோர் முகத்தைப்பாரார்
நிதிமிகப் படைத்தோர்க் கீவார் நிலையிலார்க் கீயமாட்டார்.

இ-ள். மேகக்கூட்டங்கள் செவந்த நெற்பயிர்கள் நீரின்றி வாடக்கண்டும், அங்கு நீர் பொழியாது அலைகள் வீசாநின்ற சமுத்திரத்தினிடத்துப் பெய்யுந் தன்மைபோல, உலகத்தில் மதிக்கத்தக்க தனம் படைத்தவர்கள் தம்மைப் போன்ற தனவந்தர்களுக்கு ஈவாரல்லாமல் நிலையிலாது வாடினோர் முகங் கண்டு கொடுக்கார்கள். எ-று. (5)

செல்வரை எல்லோரும் நாடுவர்.

ஆலிலை பூவுங் காயு மளிதரு பழமு முண்டேல்
சாலவே பட்சி யெல்லாந் தங்குடி யென்றே வாழும்
வாலிபர் வந்து தேடி வந்திப்பார் கோடி கோடி
ஆலிலை யாதி போனா லங்குவந் திருப்பா ருண்டோ.

இ-ள். ஆல விருட்சத்தினிடத்து இலை, பூ, காய், பழம் முத லியவைகளிருந்தால் மிகுதியாகப் பல பட்சிகள் தமது இருப்பிடம் போலக் கூடிவாழும்; இலை முதலியவை நீங்கி மரம் பட்டு நிற்கில் ஒரு பட்சியுஞ்சேராது. அதுபோல ஒருவனிடத்தில் செல்வமிருக் கில் அளவிறந்தவர்கள் அவனிடம் வந்துகூடி வந்தனஞ் செய்வார் கள் ; செல்வமில்லையேல் ஒருவருங் கூடார். எ-று. (6)

தம்மை வருத்துவோர்க்கே தான மீவர்.

பொருட்பாலை விரும்புவர்கள் காமப்பா லிடைமூழ்கிப்
புரள்வர் கீர்த்தி, யருட்பாலா மறப்பாலைக் கனவிலுமே விரும்
பார்க ளறிவொன் றில்லார், குருப்பாலக் கடவுளர்பால்
வேதியர்பாற் புரவலர்பாற் கொடுக்கக் கோரார், செருப்
பாலே யடிப்பவர்க்கு விருப்பாலே கோடிசெம்பொன்
சேவித் தீவார்.

இ-ள். செல்வத்தினிடத்தே அதிக விருப்பங் கொள்பவர்கள் காமத்தினிடத்தே மூழ்கிப்புரள்வார்கள்; அருளாகிய செல்வத்தைத் தரும் தருமத்தைக் கனவிலும் விரும்பார்கள்; கொஞ்சமும் அறி வில்லாதவர் ஆசாரியரிடத்தும், கடவுளிடத்தும், அந்தணர்களிடத் தும், அரசர்களிடத்தும் ஒரு பொருளும் கொடுக்கக் கோரார்கள். கோடி செம்பொன்னையினுந் தம்மைப் பாதரட்சையாற் சிட்சிப்ப வர்க்கே ஆசையோடு வந்தனஞ்செய்து கொடுப்பார்கள். எ-று. (7)

தாரதம்மியம்.

தண்டா மரையி னுடன்பிறந்துந் தண்டேனுகரா மண்டூகம்
வண்டோ கானத் திடையிருந்தும் வந்தேகமல மதுவுண்ணும்
பண்டே பழகி யிருந்தாலு மறியார் புல்லோர் நல்லோரைக்
கண்டே களித்தங் குறவாடித் தம்மிற் கலப்பர் கற்றோரே.

இ-ள். தவளையானது தன்னுடன் பிறந்து வளர்ந்திருக்கும் குளிர்ந்த தாமரையிலுள்ள தேனை உண்ணவறியாது; காட்டிலிருக்

கும் வண்டுகளோடிவந்து அந்த மதுவை யுண்டுகளிக்கும். (அது போல) நெடுநாள் பழகியிருக்கினும் கற்றோர் அருமையை அறிவிலார் அறியார்; கற்றவரே அறிவர். (8)

மூடர்க்குரைத்த உபதேசம்.

வானர மழைதனி னனையத் தூக்கணந்
தானொரு நெறிசொலத் தாண்டிப் பிய்த்திடும்
ஞானமுங் கல்வியு நவின்ற நூல்களும்
ஈனருக் குரைத்திடி லிடர தாகுமே.

இ-ள். முன்னமே பிரயாசையாற் கூடுகட்டி வசித்திருந்த ஒரு தூக்கணம் பட்சி, வீண்காலங்கழித்துத் திரிந்து வசிக்க இடமின்றி மழையில் நனைந்து வருந்திய ஒரு வானரத்தைக்கண்டு, என்னைப்போல் ஓர் இருப்பிடம் செய்து கொள்ளலாகாதா வென்றவுடனே, குரங்கு சினந்து அதன் கூட்டைப் பறித்தெறிந்ததுபோல ஞானமுங் கல்வியும் அறிவிலார்க் குரைத்திடில் துன்பமே யுண்டாகும். எ-று. (9)

ஒரு தலைமகள் சிறப்பு.

வண்டுமொய்த் தனைய கூந்தல் மதனபண் டார வல்லி
கெண்டையொ டொத்த கண்ணாள் கிளிமொழி வாயினூறல்
கண்டுசர்க் கரையோ தேனோ கனியொடு கலந்த பாகோ
அண்டமா முனிவர்க் கெல்லா மமுதமென் றளிக்க லாமே.

இ-ள். வண்டுகள் மொய்த்திருப்பதுபோன்ற கரிய கூந்தலையும், கயலையொத்த கண்களையும், கிளிமொழியையொத்த சொல்லையுமுடைய மன்மத பொக்கிஷமென்னும் பெயரையுடைய பொற்கொடிபோன்றவளின் வாயி னூறல் கற்கண்டோ! சர்க்கரையோ! தேனோ! பழத்தோடு கலந்த சர்க்கரைப்பாகோ! தேவர் முனிவர்களுக்கெல்லாம் அமிர்தமென்று கொடுக்கலாம் போலும். எ-று. ()

அற்பரைச் சேர்ந்தோர் வாழ்வு.

கற்பகத் தருவைச் சார்ந்த காகமு மமுத முண்ணும்
விற்பன விவேக முள்ள வேந்தரைச் சேர்ந்தோர் வாழ்வார்
இப்புவி தன்னிற் கிள்ளை யிலவுகாத் ததனைப் போல
அற்பரைச் சேர்ந்தோர் வாழ்வ தரிதரி தாகு மம்மா.

இ-ள். கற்பக விருட்சத்தை அடைந்த காகமும் அமிர்தமுண்ணும்; மிகுதியான அறிவுள்ள வேந்தரைச்சேர்ந்த (எளியரும்) வாழ்வடைவார்கள். இலவு விருட்சத்தின் காயைப் பார்த்துப் பழுக்கும் பழமென்று காத்திருந்து அபலமடையுங் கிளியைப்போல் அற்பரைச்சேர்ந்தோ ருலகில் வாழ்வது அரிதினுமரிதாகும். எ-று. அம்மா—வியப்பிடைச் சொல். (11)

மாதரை நம்பினோர் கதி.

ஆலகால விஷத்தையும் நம்பலா மாற்றை யும்பெருங் காற்றையு நம்பலாங், கோல மாமத யானையை நம்பலாங் கொல்லும் வேங்கைப் புலியையு நம்பலாங், கால னார்விடு தூதரை நம்பலாங் கள்ளர் வேடர் மறவரை நம்பலாஞ், சேலை கட்டிய மாதரை நம்பினாற் றெருவில் நின்று தியங்கித் தவிப்பரே.

இ-ள். மனிதர் ஆலகாலவிஷம், ஆறு, பிரசண்டக் காற்று, அழகிய பெரிய மதயானை, கொல்லத்தக்க வேங்கைப்புலி இவற்றையும், எமனாலே விடுந் தூதர்கள், வேடர், மறவர், முதலியவர்களையும் நம்பினாலும் சேலை கட்டிய மங்கையரை (நம்பொணாது); நம்புபவர் தெருவில் நின்று மயங்கித் தவிப்பார்கள். எ-று. (12)

நிலைவிட்டுப் பெயர்ந்தோர் கதி.

சங்குவெண் டாம ரைக்குத் தந்தைதா யிரவி தண்ணீர், அங்கதைக் கொய்து விட்டா லழுகச்செய் தந்நீர் கொல்லும், துங்கவெண் கரையிற் போட்டாற் சூரியன் காய்ந்து கொல்வான், தங்களி னிலைமை கெட்டா லிப்படித் தயங்கு வாரே.

இ-ள். சங்குபோன்ற வெள்ளைத்தாமரைக்குச் சூரியனும் தண்ணீரும் பிதா மாதாக்களாக விருக்கினும் அத்தாமரையைக் கொய்து விடில் அந்நீரேயதனை அழுகச்செய்து கொல்லும்; கரையிலிடில் சூரியன் காய்ந்து கொல்வான். அதுபோலத் தங்கள் நிலைவிட்டுப் பெயர்ந்தவர்கள் இவ்விதம் வருந்துவார்கள். எ-று. (13)

உலுத்தர் குணம் மாறுது.

நாய்வாலை யளவெடுத்துப் பெருக்கித் தீட்டி நற்றமிழை யெழுதவெழுத் தாணி யாமோ, பேய்வாழுஞ் சுடுகாட்டைப் பெருக்கித் தள்ளிப் பெரியவிளக் கேற்றிவைத்தால் வீட தாமோ, தாய்வார்த்தை கேளாத சகசண் டிக்கென் சாற்றிடினு முலுத்தகுணந் தவிர மாட்டான், ஈவாரை யீய வொட்டா னிவனு மீயா னெழுபிறப்பி னுங்கடையா மிவன் பிறப்பே.

இ-ள். நாயினதுவாலை எழுத்தாணி இலக்கணப்படி நீட்டித் தீட்டினாலும் அது, நல்ல தமிழ் எழுத்துக்களை எழுதுங் கருவியாகுமோ? பேய்கள்வாழுஞ் சுடுகாட்டைக் கூட்டித்தள்ளிப் பெரிதாகிய விளக்கேற்றிவைத்தாலும் அது வாசஞ்செய்தற்குரிய வீடாகுமோ? தாய்மொழி கேளாத சகசண்டிக்கு எவ்விதம் உரைக்கினும் அவன் உலோப குணத்தை விடமாட்டான்; கொடுப்பவரையுங் கொடுக்க வொட்டான்; இவன் ஜன்மம் எழுவகைப் பிறப்பினும் ஈனத்துவம் படைத்த கடைச் சன்மமே யாகும். எ-று. (14)

பெண்களின் மாயம்.

வெம்புவாள் விழுவாள் பொய்யே மேல்விழுந் தழுவாள் பொய்யே, தம்பலந் தின்பாள் பொய்யே சாகின்றே னென்பாள் பொய்யே, அம்பினுங் கொடிய கண்ணா ளாயிரஞ் சிந்தை யாளை, நம்பின பேர்க ளெல்லாம் நாயினுங் கடையா வாரே.

இ-ள். ஒருத்தி தயங்குவள்; விழுவள்; மேல் விழுந்தழுவள்; உரித்தானவள்போல் எச்சிற்றம்பலத்தையு முண்பாள்; உன்னுடன் கூட இறப்பேனென்பாள். இவையாவும் பொய்யே. இவ்வித ஜாலங்களமைந்த பல கவனங்களையுடைய அம்பினுங் கொடுஞ் செயல்களைக் காட்டுங் கண்களையுடைய மங்கையரை நம்பினவர்க ளெல்லாம் நாயினுக்குங் கீழ்ப்பட்டவரேயாவர். எ-று. (15)

அற்ப ருறவு ஆபத்தே.

கெற்பத்தான் மங்கையருக் கழகு குன்றுங் கேள்வியில்
லா வரசனு லுலகம் பாழாந், துற்புத்தி மந்திரியா லரசுக்
கீனஞ் சொற்கேளாப் பிள்ளைகளாற் குலத்துக் கீனம், நற்
புத்தி கற்பித்தா லற்பர் கேளார் நன்மைசெய்யத் தீமை
யுட னயந்து செய்வார், அற்பரோ டிணங்கிவிடிற் பெருமை
தாழு மரியதவங் கோபத்தா லழிந்து போமே.

இ-ள். மங்கையருக்குக் கருப்பத்தால் அழகு குறையும்; நியாய முறை வினவாத அரசனுல் உலகு பாழாகும்; இராஜாங்கத்துக்குத் துற்புத்தியுள்ள மந்திரிகளால் கெடுதியுண்டாகும்; அறிவிலார்க்கு நல்ல புத்திகளைச் சொன்னாலும் அவர் கேளார்; நன்மை செய்ப வர்க்கு உடனே தீமையைப் பாராட்டிச் செய்வார். இவ்விதமான சிறியவர்களோடு கூடினவர் மகிமை குறையும். கோபத்தினுல் அரு மையாகிய தவங்களும் சிதைந்துபோம். எ-று. (16)

சமயத்துக் குதவாதவை.

தன்னுடன் பிறவாத் தம்பி தனைப்பெறுத் தாயார் தந்தை
அன்னிய ரிடத்துச் செல்வ மரும்பொருள் வேசி யாசை
மன்னிய வேட்டின் கல்வி மறுமனை யாட்டி வாழ்க்கை
இன்னவாங் கரும மாறு மிடுக்கத்துக் குதவா வன்றே.

இ-ள். உடன்பிறவாத சகோதரன், தன்னைப்பெறுத் தாய் தந்தையர், மற்றோரிடத்திலுள்ள செல்வம், பொருளிச்சை

கொண்ட வேசியராசை, எட்டி லெழுதியிருக்குங் கல்வி, அயலான் மனைவியோடு கூடியவாழ்க்கை இந்த ஆறு வகைகளும் தக்கசமயத் துக் குதவமாட்டா. எ-று. (17)

இங்கிதம்.

ஒருநான்கு மீரரையு மொன்றே கேளா யுண்மையா யையரையு மரையுங் கேட்டேன், இருநான்கு மூன்றுடனே யொன்றுஞ் சொல்லா யிம்மொழியைக் கேட்டபடி யீந்தா யாயின், பெருநான்கு மறுநான்கும் பெறுவாய் பெண்ணே பின்னையோர் மொழிபுகல வேண்டா மின்றே, சரிநான்கும் பத்துமொரு பதினெந் தாலே சகிக்கமுடி யாதினியென் சகியே மானே.

இ-ள். ஆறுவது ராசி கன்னி; மூன்றுவது நாள் செவ்வாய்; பன்னிரண்டாவது நட்சத்திரம் உத்திரம்; எட்டு-அஷ்ட ஐசுவரி யம்; இருபத்தொன்பதாவது ஆண்டு மன்மத. (கருத்து) கன்னியே! உன் செவவாயைக் கேட்டேன்; ஒருத்திரம் சொல்வாய்; கேட்ட படி கொடுப்பாயாகில் நீ அஷ்ட ஐசுவரியங்களைப் பெறுவாய்; வேறு புகன்மொழி சொல்லக்கூடாது. மன்மத வாதனையாலே துன்பஞ் சகிக்கமுடியாது. எ-று.

(இது ஒரு விரகமுற்றோன் கூறியது.) (18)

ஒரு ஸ்திரீயின் வனப்பு.

தேனுகர் வண்டு மதுதனை யுண்டு தியங்கியே கிடந்த தைக் கண்டு, தானதைச் சம்பு வின்கனி யென்றே தடக்கையா லெடுத்துமுன் பார்த்தாள், வானுறு மதியம் வந்ததென் றெண்ணி மலர்க்கரங் குவியுமென் றஞ்சிப், போ னது வண்டோ பறந்ததோ பழந்தான் புதுமையோ விது வெனப் புகன்றாள்.

இ-ள். தேனையுண்ணத்தக்க வண்டு அந்த மதுவையுண்டு மயங்கிக்கிடந்ததைக்கண்ட ஒரு பெண் அதை நாவற்பழமென்று

விசாலித்த தனது கையாலெடுத்துப் பார்த்தாள். அவ்வண்டு அவள் முகத்தினழகால் ஆகாயத்தின் கண்ணுள்ள சந்திரன் வந்ததென்று நினைத்து, அதனால் அவள் விரல்களாகிய தாமரை மலரிதழ்கள் மூடிக்கொள்ளுமென்று பயந்து பறந்துவிட்டது. அதைக் கண்ட அம்மங்கை பறந்துபோனது வண்டோ? பழமோ? அல்லது யாது புதுமையோ! வென்று ஐயமுற்றுச் சொன்னாள். எ-று.

(இது ஒரு ஸ்திரீயின் முகத்தையுங் கரத்தையும் வியந்து கூறியது.) (19)

மனிதரின் தராதரம்.

கருதியநூல் கல்லாதான் மூட னாகும் கணக்கறிந்து பேசாதான் கசட னாகும், ஒருதொழிலு மில்லாதான் முகடி யாகும் ஒன்றுக்கு முதவாதான் சோம்ப னாகும், பெரியோர்கள் முன்னின்று மரத்தைப் போலும் பேசாம லிருப்பவனே பேய னாகும், பரிவுசொல்லித் தழுவினவன் பசப்ப னாகும் பசிப்பவர்க்கிட் டுண்ணாதான் பாவி யாமே.

இ-ள். மதிக்கத்தக்க நல்ல சாஸ்திரங்களைக் கல்லாதவன் மூடன்; அளவறிந்து பேசாதவன் கசடன்; ஒரு தொழிலு மில்லாதவன் மூதேவி; ஒன்றுக்கு முதவாதவன் சோம்பன்; மரம்போல் வணங்காது அறிவுடையோர் முன்பாக நின்று துதியாதிருப்பவன் பேய்; (அன்பின்றி) அன்புபோற் காட்டித் தழுவுகின்றவனே பசப்புகின்றவன்; பசியாளர்க்குக் கொடுத்துண்ணாதவன் பாவி. எ-று. (20)

வறுமையின் கொடுமை.

தாங்கொணா வறுமை வந்தாற் சபைதனிற் செல்ல நாணும்
வேங்கைபோல் வீரங் குன்றும் விருந்தினர்க் காண நாணும்
பூங்கொடி மனையாட் கஞ்சும் புல்லருக் கிணங்கச் செய்யும்
ஓங்கிய வறிவு குன்று முலகெலாம் பழிக்குந் தானே.

இ-ள். பொறுப்பதற்கரிய தரித்திரம் ஒருவனுக்கு வந்தால் சபையிற் செல்ல வெட்கமாம்; வேங்கைப் புலிபோலுள்ள வீரமுங் குறையும்; விருந்தினரைப் பார்க்கவும் வெட்கமுண்டாம்; புட்பக் கொடி போன்ற இடையையுடைய தன் மனைவிக்கும் அவன் பயப் படும் நிலைமை வரும்; அற்பர்களோடு கூட்டுறவுண்டாகும்; மேன் மேலும் வளரத்தக்க அறிவும் குறையும்; உலகமெல்லாம் பழித்தற் கிடமுண்டாம். எ-று. (21)

விதியை விலக்கமுடியாது.

அரும்பு கோணிடி லதுமணங் குன்றுமோ
கரும்பு கோணிடிற் கட்டியும் பாகுமாம்
இரும்பு கோணிடில் யானையை வெல்லலாம்
நரம்பு கோணிடில் நாமதற் கென்செய்வோம்.

இ-ள். புட்பவரும்பு கோணலா யிருந்தாலும் அதின் மணம் குறையுமோ? குறையாது. கரும்பு கோணலாயிருந்தாலும் வெல்லமும் பாகுமாம்; இரும்பு கோணலானால் பெரிய மதயானையையும் ஜயிக்கலாம். (தேக) நரம்புகள் கோணி நிரியாணதிசை ஒருவர்க் கெய்தில் நாமென்ன செய்வோம்? எ-று. (22)

வேசையர் மயக்கவிளக்க வினா.

அன்னையே யனைய தோழி யறந்தனை வளர்க்கு மாதே, உன்னையோ ருண்மை கேட்பே னுரைதெரிந் துரைத்தல் வேண்டும், என்னையே புணரு வோர்க ளெனக்குமோ ரின்ப நல்கிப், பொன்னையுங் கொடுத்துப் பாதப் போதினில் வீழ்வ தேனோ.

இ-ள். தாய்போலுங் கருணையுள்ள பாங்கியாகிய தரும குண நிறைந்த பெண்ணே! உன்னிடத்தில் ஒருண்மை கேட்கிறேன்; நீ அதைத் தெரிந்து சொல்லவேண்டும். அதாவது என்னிடத்துக் கலவியை விரும்பினவர்கள் எனக்கும் இன்பத்தைக் கொடுத்துப் பொருளையுங் கொடுத்து எனது மலர்போன்ற காலில் வீழ்கின்றார்களே யாது காரணம்? எ-று. (23)

௩ வினுவுக்கு விடை.

பொம்மெனப் பணைத்து விம்மிப் போர்மதன் மயங்கிவீழுங்
கொம்மைசேர் முலையி னாளே கூறுவே னுண்மை கேண்மோ
செம்மையி லறஞ்செய் யாதார் திரவியஞ் சிதற வேண்டி
நம்மையுங் கள்ளுஞ் சூதும் நான்முகன் படைத்த வாறே.

இ-ள். பொலிவாகிப் பருத்து விம்முதலுற்று வலிமையுள்ள மன்மதனையும் மயங்கச் செய்யும் வட்டவடிவான தனத்தையுடையவளே! உண்மையைச் சொல்லுகிறேன் கேட்பாயாக. செவ்வையாகத் தருமஞ் செய்யாதவர்கள் பொருள்களெல்லாஞ் சிதறுதலடையும் பொருட்டே நம்போன்ற வேசியரையும், கள்ளையும், சூதாடுதலையும் பிரமதேவன் படைத்திருக்கிறான். எ-று. (இவ்விரண்டு செய்யுட்களும் ஒரே தொடர்.) (24)

மாந்தர் இயல்பு.

பொன்னொடு மணியுண் டானாற் புலைஞனுங் கிளைஞனென்று
தன்னையும் புகழ்ந்து கொண்டு சாதியின் மணமுஞ்செய்வார்
மன்னரா யிருந்த பேர்கள் வகைகெட்டுப் போவா ராகில்
பின்னையு மாரோ வென்று பேசுவா ரேசு வாரே.

இ-ள். பொருளும், புகழும் ஒருவனுக்கு உண்டானால் அவன் புலையனாயினும் மனிதர், அவன் தங்கள் சுற்றத்தானென்று புகழ்ந்துகொண்டு உயர்ந்த சாதியிலும் மணமுடிப்பார்கள். அரசரா யிருந்தவரும் சீர் குலைந்து போவாராகில் அவரை யாரோ வென்று இகழ்ந்து பேசுவார்கள். எ-று. (25)

மாதமும்மாரி பெய்த காரணம்.

வேத மோதிய வேதியர்க் கோர்மழை
நீதி மன்னர் நெறியினுக் கோர்மழை
மாதர் கற்புடை மங்கையர்க் கோர்மழை
மாத மூன்று மழையெனப் பெய்யுமே.

இ-ள். முற்காலத்தில் வேத மோதுகின்ற அந்தணருக்கு ஒரு மழை; நீதி வழி தப்பாத அரசர்களுக்கு ஒரு மழை; அழகிய கற்பிற் சிறந்த மங்கையர்க்கு ஒரு மழையாக ஒவ்வொரு மாதத்திலும் மூன்று மழை வருஷிக்கும். எ-று. (26)

வருடமும்மாரி பெய்யும் காரணம்.

அரிசி விற்றிடு மந்தணர்க் கோர்மழை
வரிசை தப்பிய மன்னருக் கோர்மழை
புருஷ னைக்கொன்ற பூவையர்க் கோர்மழை
வருஷ மூன்று மழையெனப் பெய்யுமே.

இ-ள். தற்காலம் அரிசி விற்பனை செய்கின்ற பிராமணர் களுக்கு ஒரு மழை; நியாயந் தவறிய அரசர்களுக்கு ஒரு மழை; கணவனைக் கொல்லும் பெண்களுக்கு ஒரு மழையாக ஒவ்வொரு வருடத்திலும் மூன்று மழை பொழிகின்றது. எ-று. (27)

பயனிலாத செயல்கள்.

திருப்பதி மிதியாப் பாதஞ் சிவனடி வணங்காச் சென்னி
இரப்பவர்க் கியாக் கைக ளினியசொற் கேளாக் காது
புரப்பவர் தங்கள் கண்ணீர் பொழிதரச் சாகாத் தேகம்
இருப்பினும் பயனென் காட்டி லெரிப்பினு மில்லைதானே.

இ-ள். ஸ்ரீ சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திவ்ய க்ஷேத் திரங்களை மிதியாதான் பாதமும், சிவபெருமானுடைய பாதத்தை வணங்காதான் தலையும், யாசிப்பவர்க்குக் கொடாதான் கைகளும், இனிமையான சொற்களைக் கேளாதான் செவியும், தங்களை ரட்சிக் கின்றவர்கள் கண்களிலிருந்து ஜலமொழுகப் பார்த்தும் உயிர் கொடாதான் தேகமும் இருந்து பயனென்ன? காட்டில் வைத்து எரித்திடினும் பயனில்லை. எ-று. (28)

இதற்களித்தால் இதுவாகுமெனல்

தன்னுடல் தனக்கொன் றீந்தால் தக்கதோர் பலம தாகும்
மின்னியல் வேசைக் கீந்தால் மெய்யிலே வியாதி யாகும்
மன்னிய வுறவுக் கீந்தால் வருவது மயக்க மாகும்
அன்னிய பாத்துக் கீந்தா லாருயிர்க் குதவி யாமே.

இ-ள். தன் தேகத்துக்கு ஒன்றைக் கொடுக்கில் அதற்குத் தக்க பலமுண்டாகும்; மின்னலைப்போல் அன்பைக் காட்டி மறைக்கும் இயல்புள்ள வேசையருக்குக் கொடுத்தால் தேகத்திற்குப் பிணியுண்டாகும்; பொருந்திய உறவினருக்குக் கொடுத்தால் மனமயக்கமே வருவதாகும்; அன்னியமாகிய பரதேசிகட்கீந்தால் பொருந்திய உயிர்த்துணையாகும். எ-று. (29)

ஸ்திரீகளை நம்பொணாதெனல்.

படியினப்பொழு தேவதைத்திடும் பச்சை நாவியை நம்பலாம், பழிநமக்கென வழிமறித்திடு பழைய நீலியை நம்பலாங், கொடுமதக்குவ டெனவளர்ந்திடு குஞ்ச ரத்தையு நம்பலாங், குலுங்கப்பேசி நகைத்திடுஞ்சிறு குமரர்தம்மையு நம்பலாங், கடையிலக்கமு மெழுதிவிட்ட கணக்கர்தம்மையு நம்பலாங், காக்கைபோல்விழி பார்த்திடுங்குடி காணி யாளரை நம்பலாம், நடைகுலுக்கிமு முகமினுக்கிபு நகைநகைத்திடு மாதரை, நம்பொணாதுமெய் நம்பொணாதுமெய் நம்பொணாதுமெய் காணுமே.

இ-ள். உலகத்தில் உண்டபொழுதே கொல்லத்தக்க விஷத்தையும், பழியைக் கருதாது ஒரு வணிகனை வழிமறித்துக் கொலை செய்த பழையனூர் நீலியையும், கொடிய மும்மதங்களை யுடையதாய் மலைபோன்று வளர்ந்திராநின்ற யானையையும், குலுங்கப் பேசிச் சிரித்து ஏமாற்றும் யௌவனச் சிறுவரையும், குடிகளுக்குக் கணக்கின் உள் வயணத்தைக் காட்டாமல் மோசவகையாய்த் தானெழுதி வைத்த கட்டுத் தொகையைக்காட்டி வஞ்சிக்கும் கணக்கர்களையும்,

ஒரே விழியை யுடையதாயிருந்து கூரிய பார்வை யுடையதான காக்கையைப் போலப் பயிரிடுங் குடிகளுக்கு யாதொரு ஆதாயமுங் கிட்டாதபடி கட்டிக்காக்கும் காணியாட்சியையுடையவரையும் நம்ப லாகும்; ஆனால் நடக்கும்போதே குலுக்கியும், முகத்தை மஞ்சள் முதலியவற்றால் மினுக்கியும், பற்கள் தெரிய நகைத்தும் திரிகின்ற மாதர்களை நம்பக்கூடாது; இது முக்காலும் உண்மை. எ-று. (30)

இவைகளிருக்கில் இவையாமெனல்.

வண்டுக ளிருந்திடின் மதுவை யுண்டிடுந்
தண்டமி ழிருந்திடிற் சங்கஞ் சேர்ந்திடுங்
குண்டுணி யிருந்திடில் கோள்கள் மிஞ்சிடும்
பெண்டுக ளிருந்திடிற் பெரிய சண்டையாம்.

இ-ள். வண்டுகளிருந்தால் தேனையுண்ணும்; அழகிய தமிழிருந்தால் அநேக கூட்டத்தினர் உறவு உண்டாகும்; குண்டுணிகளிருந்தால் கோள்களே மிகுதியாயுண்டாகும்; பெண்கள் பலர் கூடியிருந்தால் பெரிய சண்டை சச்சரவுகளுண்டாகும். எ-று. (31)

அரியபொருள் பிறர் கைப்படுஞ் சமயம்.

கற்புடை மாதர் கொங்கை கவரிமான் மயிரின் கற்றை
வெற்புறு வேங்கையின்றோல் வீரன்கை வெய்யகூர்வேல்
அற்பர்தம் பொருள்க டாமு மவரவ ரிறந்த பின்னே
பற்பலர் கொள்வா ரிந்தப் பாரினி லுண்மை தானே.

இ-ள். கற்புள்ள பெண்களின் ஸ்தனம், கவரிமான் மயிர்முடி, மலையிலுள்ள வேங்கையின்தோல், சத்த வீரர்களின் கையிலுள்ள வேல், அற்பர்களிடத்திலுள்ள பொருள் இவையாவும் அவரவர் உயிர் நீங்கிய பின்பு பலருங் கைக்கொள்வார்கள்; இவை யுலகத்தில் நிச்சயமாகும். எ-று. (32)

கைக்கோண்டோர் திறன்.

வீணர்பூண் டாலுந் தங்கம் வெறும்பொய்யா மேற்பூச் சென்பார், பூணுவார் தராப்பூண் டாலும் பொருந்திய தங்க மென்பார், காணவே பனைக்கீ ழாகப் பாற்குடிக் கினும்கள் ளென்பார், மாணுல கத்தோர் புல்லர் வழங்குரை மெய் யென் பாரே.

இ-ள். அற்பர்கள் தங்கத்தை அணிந்திருந்தாலும் கண்டவர் கள் தங்கமல்ல மேற்பூச்சென்பார்கள்; பூணத்தக்க செல்வர்கள் தரா பித்தளை முதலிய நகைகளை அணிந்திருந்தாலும் உயர்ந்த தங்கமென் பார்கள்; பலரும் பார்க்கப் பனைநிழலிருந்து பாலைக்குடித்தாலும் கள் குடித்தா னென்பார்கள் ; பெருமை தங்கிய உலகத்தார் அறி வீனரின் பொய்ம்மொழிகளையே மெய்யென்பார்கள். எ-று. (33)

சோர ஸ்திரீயின் இழிவு.

ஓரியே மீனுவந் தூணி ழந்தையோ
நாரியே நின்பிழை நாட்டி லில்லையே!
பாரிய கணவனைப் பழுது செய்துநீ
நீரிலே யிருப்பது நிலைமை யல்லவே!

இ-ள். கணவனை யிகழ்ந்து நீங்கிவந்த ஒருபெண், சோரநாயக னால் தன்னுடை அபகரிக்கப்பட்டு, அம்மணமாய் நீரில் நின்று கொண்டு, அங்குவந்த, ஒரு நரியைப்பார்த்து, "நரியே! ஓர் மீனை இச்சித்து வாயிலிருந்த உணவை யிழந்தனையே யாது காரணம்?" என்ன, அந்நரி, "ஓ, பெண்ணே! உனது தவறுதல் உலகத்திலில்லை; நீ பெருமை தங்கிய புருடனை யிகழ்ந்து இத்தன்மையிலிருப்பது உன் தன்மைக் கழகல்லவே" என்றது. எ-று. (34)

இதுவுமது.

சம்புவே யென்ன புத்தி சலந்தனின் மீனை நம்பி
வம்புறு வடத்தைப்போட்டு வானத்தைப்பார்ப்ப தேனோ
அம்புவி மாதே கேளா யாசனை யகல விட்டு
வம்பனைக் கைப் பிடித்த வாறுபோ லாயிற் றன்றே.

இ-ள். "நரியே! என்ன மதியால் ஜலத்திற்றுள்ளிய மீனை நம்பி நாற்றமுள்ள மாமிசத்துண்டையிழந்து ஆகாயத்தைப் பார்க்கின்றனை? யாது காரணம்" என்று கேட்ட பெண்ணைப் பார்த்து அந்த நரி, "உலகத்தில் மெச்சத்தக்க பெண்ணே! நீ உன் நாயகனாகிய அரசனை அகலவிட்டு மற்றொரு புருஷனைக் கைப்பிடித்தவாறு போலாயிற்று. அறிவாயாக" என்றது. எ-று. (35)

அழிதலடைவன.

மூப்பிலாக் குமரி வாழ்க்கை முனிவிலா வரசன் வீரங்
காப்பிலா விளைந்த பூமி கரையிலா திருந்த வேரி [னம்
கோப்பிலான் கொண்டகோலங் குருவிலான் கொண்ட ஞா
ஆப்பிலாச் சகடு போல வழியுமென் றுரைக்க லாமே.

இ-ள். தனக்கு மூத்தோரில்லாமற் றனியே வாழும் பாலியப் பெண் வாழ்வும், கோபமில்லாத வரசன்வீரமும், காத்தலில்லாமல் விளைந்த பூமியும், கரையில்லா திருந்த ஏரியும், தன்னிடம் வேண்டியவைக ளமைதலில்லாதவன் கொண்ட கோலமும், குருவில்லாதவன்கொண்ட ஞானமும் ஆகிய இவையாவும் அச்சாணியில்லாத வண்டிபோல அழிந்துபோமென்று சொல்லலாம். எ-று. (36)

ஒரு பெண்ணின் நடையை வியந்தது.

பொன்னின்மணி கிண்கிணி சிலம்பொலி புலம்ப
மின்னுமணி மேகலைகள் மெல்லென வொலிப்பச்
சின்னமலர் கொண்டுசில சேடியர்கள் சூழ
அன்னமென வல்லவென வாமென வுரைத்தார்.

இ-ள். ஒருத்தி நடக்கும்போது பொன் மணிகளும், சதங்கை மணிகளும், சிலம்புகளுஞ் சப்திக்கப் பிரகாசிக்கின்ற மணிமேகலைகள் மெதுவாய் ஒலிக்க, அரும்பு மலர்களைக்கொண்டு சில பாங்கியர்கள் சூழ்ந்துவர அவளை அன்னமென்றும், அல்ல வென்றும், ஆமென்றும் கண்டோர் கூறினர். எ-று. (37)

நம்பிக்கை மோசம்.

கானலை நீரென் றெண்ணிக் கடுவெளி திரியுமான்போல்
வானுறு மிலவு காத்த மதியிலாக் கிளியைப் போல
தேனினை யுண்டுதும்பி தியங்கிய தகைமையைப்போல்
நானுனை யாசென்றெண்ணி நாளையும் போக்கினேனே.

இ-ள். கானலைத் தண்ணீரென்று நினைத்து வெட்டவெளியில் ஓடித்திரியும் மான் போலவும், பழுக்குமென்று இலவுவிருட்சத்தைக் காத்த அறிவில்லாத கிளியைப்போலவும், கள்ளையுண்டு மயங்கிய வண்டுபோலவும் நானுன்னை இராஜனென்று கருதி என்னுடைய நாளை வீணகப்போக்கினேன். எ-று. (38)

தலைவனைப் பிரிந்த தலைவிவருந்தல்.

சங்குமுழங்குந் தமிழ்நாடன் றன்னைநினைந்த போதெல்லாம்
பொங்குகடலு முறங்காது பொழுதோர் நாளும் விடியாது
திங்களுறங்கும் புள்ளுறங்குந் தென்றலுறங்குஞ் சிலகாலம்
எங்குமுறங்கு மிராக்கால மென்கண்ணிரண்டு முறங்காதே.

இ-ள். சங்குகள் முழங்காநின்ற எனது தமிழ்நாட்டதிபனை நினைக்கும் போதெல்லாம் அலைகள் வீசாநின்ற சமுத்திரமுந் தூங்குவதில்லை; பொழுது விடிகிறதில்லை: சந்திரனும், அன்றில் குயில் முதலிய பட்சிகளும், தென்றற்காற்றும் தூங்கும்; பேய்முதலிய சகல பிராணிகளும் சிலநேரம் தூங்கத் தக்க இராக்காலத்தில் யாது காரணமோ என் கண்கள் மட்டும் உறங்குவதில்லை. எ-று. (39)

இன்னார்க்கு இதனுல் மரணமென்பது.

அரவினை யாட்டு வாரு மருங்களி றூட்டு வாரும்
இரவினிற் றனிப்போ வாரு மேரிநீர் நீந்து வாரும்
விரைசெறி குழலி யான வேசையை விரும்பு வாரும்
அரசனைப் பகைத்திட் டாரு மாருயி ரிழப்பர் தாமே.

இ-ள். பாம்பாட்டுகிறவர்களும், அரிய யானைப்பாகர்களும், இராத்திரியில் தனிவழி செல்லுகின்றவர்களும், எரி ஜலத்தில் நீந்துகின்றவர்களும், வாசனை நிறைந்த கூந்தலையுடைய வேசியரை இச்சிக்கின்றவர்களும், அரசர்களைப் பகைத்துக்கொண்டவர்களும் அச்செயல்களால் தங்கள் உயிரை இழப்பார்கள். எ-று. (40)

வாழ்வும் தாழ்வும்.

வாழ்வது வந்தபோது மனந்தனின் மகிழ வேண்டாம்
தாழ்வது வந்த தானுற் றளர்வரோ தக்கோர் மிக்க
ஊழ்வினை வந்த தானு லொருவரால் விலக்கப் போமோ
ஏழையா யிருந்தோர் பல்லக் கேறுதல் கண்டி லீரோ.

இ-ள். வாழ்வு வந்த காலத்தில் மனதில் மகிழ்ச்சி கொள்ளக் கூடாது; தாழ்வு வந்ததென்று வருந்தவுங் கூடாது; இது மேலானோர் செய்கை. ஊழ்வினையால் வரும் செய்கைகளை யொருவரால் விலக்க முடியுமோ? ஏழையா யிருந்தவர்கள் சிவிகையிலேறத்தக்க செல்வவான்க ளாதலை நீங்கள் பார்த்ததில்லையா? எ-று. (41)

அற்பருறவு ஆபத்தே.

பருப்ப தங்கள்போ னிறைந்திடு நவமணிப் பலன்களைக் கொடுத்தாலும், விருப்ப நீங்கிய கணவரைத் தழுவுதல் வீ ணதாம் விரையார்ந்த, குருக்கு சந்தனக் குழம்பினை யன் பொடு குளிர்தா வணிந்தாலும், செருக்கு மிஞ்சிய வற்பர் தந் தோழமை செப்பவு மாகாதே.

இ-ள். மலைகளைப்போல குவியல் குவியலாக ஒன்பதுவகை இரத்தினங்களையும் பலனுகக் கொடுத்தாலும் விருப்பமில்லாத கணவரைக் கூடுதல் வீணேயாம்; வாசனை பொருந்திய சந்தனக் குழம்பை ஆசையோடு குளிர்ச்சி யுண்டாகப் பூசினாலும் மிகுந்த செருக்குடைய அற்பர்கள் சிநேகத்தை, வாயினால் சொல்லவுங் கூடாது. எ - று. (42)

செல்வப்பிணியும் பரிகாரமும்.

பெருத்திடு செல்வமாம் பிணிவந் துற்றிடில்
உருத்தெரி யாமலே யொளி மழுங்கிடும்
மருத்துள தோவெனில் வாகட த்தில்லை
தரித்திர மென்னுமோர் மருந்திற் றீருமே.

இ - ள். ஒருவனுக்குப் பெருத்த செல்வச் செருக்கென்னும் வியாதி வந்து கூடினால் உருவந் தெரியாமலே கண்ணொளி மயங்கி விடும்; இதற்கு மருந்துள்ளதோ வென்று ஆராயில் வைத்தியர் கூறிய வாகட நூற்களி லில்லை; தரித்திரமென்று சொல்லத்தக்க மருந்தினால் இது உடனே தீரும். எ - று. (43)

மாதருடைய நெஞ்சம்.

அத்தியின் மலரும்வெள்ளை யாக்கைகொள் காக்கைதானும்
பித்தர்தம் மனமு நீரிற் பிறந்தமீன் பாதந் தானும்
அத்தன்மால் பிரம தேவ னாலள விடப்பட் டாலுஞ்
சித்திர விழியார் நெஞ்சந் தெளிந்தவ ரில்லை கண்டீர்.

இ - ள். அத்திமரத்தின் பூவையும், வெள்ளை நிறங்கொண்ட காக்கையையும், பயித்தியக்காரர் மனத்தையும், ஜலத்திற் பிறந்த மச்சங்களின் பாதத்தையும், சிவன், விஷ்ணு, பிரமதேவன் முதலிய வர்கள் அளவிட்டு ஒருகால் கண்டறிந்தாலும், சித்திரத்தை யொத்த கண்களை யுடைய பெண்களின் நெஞ்சத்தின் கருத்தைக் கண்டு தெளிந்தவர்கள் உலகத்தி லில்லை. எ-று. (44)

மித்திர பேதம்.

சொல்லுவார் வார்த்தை கேட்டுத் தோழமை யிகழ் வார் புல்லர், நல்லவர் விசாரி யாமற் செய்வரோ நரிசொற் கேட்டு, வல்லியும் பசுவுங் கூடி மாண்டதோர் கதையைப் போல, புல்லிய ரொருவ ராலே போகுமே யாவு நாசம்.

இ - ள். அற்பர்கள் பிறர் சொல்லும் வார்த்தைகளைக்கேட்டுச் சிநேகத்தை யிகழ்வார்கள். மேலானவர்கள் நன்றாய் விசாரியாமல் எதையும் செய்வரோ? செய்யார். ஒரு நரியினது சொல்லைக் கேட்டு ஒரு புலியினிடத்துப் பசு சேர்ந்து இறந்துபோன கதையைப் போல் அறிவீனராலே யாவும் நாசமாய் முடியும். எ - று. (இக்கதை பஞ்சதந்திரத்தி லுள்ளது.) (45)

செவிக்கின்பம் விளைப்பன.

கதலி வீரர் களத்திடை வையினுங்
குதலை வாயிற் குழவிகள் வையினும்
மதன லீலையின் மங்கையர் வையினும்
இத முறச்செவிக் கின்பம் விளையுமே.

இ - ள். விருதுகளைப் பெற்ற சுத்த வீரர்கள் யுத்தகளத்தினிடத்துத் திட்டினாலும், மழலைச் சொற்களையுடைய குழந்தைகள் வைதாலும், மன்மத லீலா விநோத கலவியில் மங்கையர்கள் நிந்தித்தாலும் இனிமையுறச் செவிக்கு இன்பமே உண்டாகும். எ - று. (46)

புத்திமானே பலவான்.

புத்திமான் பலவா னாவான் பலமுளான் புத்தியற்றால்
எத்தனை விதத்தி னாலு மிடாது வந்தே தீரு
மற்றொரு சிங்கந் தன்னை வருமுயல் கூட்டிச் சென்றே
உற்றதோர் கிணற்றிற்சாயல் காட்டிய உவமைபோலே.

இ - ள். ஒரு சிங்கத்தை ஒரு முயல் கூட்டிக்கொண்டு போய் ஒரு கிணற்றில் அதன் சாயலைக் காட்டிக்கெடுத்த உவமைக் கதைபோல எவ்வளவு வீரத்தன்மை யுள்ளவனானாலும், புத்தியில்லாவிடில் எந்த விதத்தினாலும் அவனுக்குத் துன்பமே வந்து சேரும். ஆதலால், புத்தியுள்ளவனே பலவான். எ-று. (இக்கதை பஞ்சதந்திரத்தி லுள்ளது.) (47)

மானத்தின் மாண்பு.

மானமுள் ளோர்க டன்னோர் மயிரறி னுயிர்வா ழாத
கானுறு கவரி மான்போற் கனம்பெறு புகழே பூண்பார்
மானமொன் றில்லார்தாமு மழுங்கலாய்ச் சவங்க லாகி
ஈனமாங் கழுதைக்கொப்பா யிருப்பரென் றறையலாமே.

இ-ள். தன்னிடத்திலுள்ள ஒரு மயிரறுந்தாலும் உயிரை விடுகின்ற கவரிமானைப்போல் மானமுள்ளவர்கள் எப்பொழுதும் புகழையே விரும்புவார்கள். மானமில்லாதவர்கள் புத்தி மழுங்கிச் சோம்பலுடையவர்களாகி ஈனமடைந்த கழுதைக்கொப்பாக இருப்பார்கள். எ-று. (48)

மூடரை மூடரே வியப்பர்.

கழுதை காவெனக் கண்டுநின் றுடிய வலகை
தொழுது மீண்டுமக் கழுதையைத் துதிசெய்யவதுதான்
பழுதி லாநமக் கார்நிக ராமெனப் பகரும்
முழுது மூடரை மூடர்கொண் டாடிய முறைபோல்.

இ-ள். அறிவில்லாத மூடர்களை அவரினுந் தாழ்ந்த முழு மூடர்கள் கொண்டாடிப் புகழ்வது எவ்வாறெனில், ஒரு கழுதை காவென்று கத்தியதைப் பார்த்து அதற்கிசைய நின்றுடிய ஒரு பிசாசு திரும்பவும் அந்தக் கர்த்தபத்தை வணங்கித் துதி செய்ய அது குற்றமில்லாக் குரலை யுடைய நமக்கு ஒப்பானவர்கள் யாரெனச் சொல்வது போலிருக்கும். எ-று. (49)

ஆசாரத்தின் தன்மை.

ஆசாரஞ் செய்வா ராகி லறிவொடு புகழு முண்டாம்
ஆசார நன்மை யாலு லவனியிற் றேவ ராவார்
ஆசாரஞ் செய்யா ராகி லறிவொடு புகழு மற்றுப்
பேசார்போற் பேச்சுமாகிப் பிணியொடு நரகில் வீழ்வார்.

இ - ள். மனிதர், ஒழுக்கந் தவறாது ஒரு காரியஞ் செய்வாரா கில் நல்ல ஞானத்தோடு புகழுமுண்டாகும்; அவ்வொழுக்கமே நன்மையானதாகில் அவரே உலகத்தில் தெய்வமாவார்; ஒழுக்கந் தவறுவாராகில் அறிவோடு நல்ல கீர்த்தியுமற்று ஊமையர்போல வார்த்தை யுண்டாகி இம்மையிற் பிணியாலுழன்று மறுமையில் நரகத்தை யடைவார்கள். எ - று. (50)

செல்வஞ் செய்யுங் கோலம்.

செல்வம்வந் துற்ற போது தெய்வமுஞ் சிறிது பேணார்
சொல்வதை யறிந்துசொல்லார் சுற்றமுந்துணையும் பேணார்
வெல்வதே கருமமல்லால் வெம்பகை வலிதென்றெண்ணார்
வல்வினை விளைவும்பாரார் மண்ணின்மேல் வாழு மாந்தர்.

இ - ள். உலகத்தில் வாழும் மானிடர் தமக்குச் செல்வமானது மிகுதியாய் வந்து சேர்ந்தபொழுது அவர் கொஞ்சமேனுந் தெய்வத்தையுங் கருதார்; பிறர் சொல்லுகின்றதைக் கேட்டுப் பதிலுஞ் சொல்லார்; பந்து மித்திரர்களையுங் கவனியார்; எக் காரியத்திலும் ஜயத்தையே கருமமாகக் கருதுவாரே யல்லாமல் வெவ்விய பகைவனுடைய வலிமையையும் எண்ணார்கள்; வலிய பாவ வினைச் செய்கையையும் பாரார்கள். எ - று. (51)

இட விசேடம்.

யானையைச் சலந்தனி லிழுத்த வக்கரா
பூனையைக் கரைதனிற் பிடிக்கப் போகுமோ
தானையுந் தலைவருந் தலம்விட் டேகினால்
சேனையுஞ் செல்வமுந் தியங்கு வார்களே.

இ-ள். ஜலத்திலிருந்த ஒரு பெரிய மதயானையைக் கடித்திழுத்த முதலையானது கரையிலுள்ள ஒரு பூனையைப் பிடிக்க முடியாது. அதுபோல் அரசர்களும் சதுரங்க சேனைகளுடன் தங்களிருப்பிடம் விட்டுச் சென்றால், சேனையும், செல்வமுங் கெட்டுத் தியங்குவார்கள். எ-று. (52)

குணமில்லா மங்கையர்.

கொண்டநற் கலைகளோடுங் குணமிலாக் கோதைமாரைக்
கண்டுவிண் டிருப்பதல்லாற் கனவிலும் புல்ல வொண்ணா
துண்டெனெ மதுவை யுண்ண வோவியப் பூவில் வீழ்ந்த
வண்டினம் பட்ட பாடு மனிதரும் படுவர் தாமே.

இ-ள். மனிதர் நல்ல சாஸ்திரப் பயிற்சியும், நற்குணமு மில்லாத மங்கையர்களைக் கண்ணால் நிதானித்துப் பார்த்து அவர்களை விலக்க வேண்டுமே யல்லாமல் கனவிலாயினுஞ் சேரவொண்ணாது. சேருவரேல், எழுதிய சித்திரமாகிய தாமரையில் தேனுண்டென்று வீழ்ந்து வருந்திய வண்டுக் கூட்டங்கள் படும் பாடு அவர்களுமடைவார்கள். எ-று. (53)

உலகோர் மேச்சுபவர்.

மயில்குயில் செங்கா லன்னம் வண்டுகண் ணாடி பன்றி
அயிலெயிற் றரவு திங்க ளாதவ னாழி கொக்கோ
டுயரும்விண் கமலம்பன்மூன் றுறுகுணமுடையோர் தம்மை
இயலுறு புவியோர்போற்று மீசனென் றெண்ணலாமே.

இ-ள். மயில், குயில், சிவந்த கால்களையுடைய அன்னம், வண்டு, கண்ணாடி, பன்றி, கூர்மை பொருந்திய பற்களையுடைய பாம்பு, சந்திரன், சூரியன், சமுத்திரம், கொக்கு, உயர்ந்த ஆகாயம், தாமரை இந்தப் பதின்மூன்று பொருள்களி னிடத்துமுள்ள குணங்கள் வகித்தவர்களை உலகத்தவர்களெல்லாம் போற்றும் ஈசனென்று சொல்லலாம். எ-று. (இவைகளின் குணங்களை விரிக்கிற் பெருகும்; ஆசிரியர்களிடத்துக் கேட்டுணர்க.) (54)

இருந்தும் இல்லாதவை.

தெருளிலாக் கலையினர் செருக்கு மாண்மையும்
பொருளிலா வறிஞரின் பொறி யடக்கமும்
அருளிலா வறிஞர்த மௌன நாசமுங்
கருவிலா மங்கையர் கற்பு மொக்குமால்.

இ-ள். தெளிவில்லாத கல்வியாளர்களுடைய அகங்காரமும், மனோவீரமும், பொருளில்லாத தரித்திரர்களுடைய மெய், வாய், கண், மூக்கு, செவி யென்ற ஐம்பொறிகளி னடக்கமும், அருளில்லாத ஞானிகளின் மவுன நாசமும், மகப்பேறில்லாத மங்கையர்கள் கற்பும் ஆகிய இவைகள் ஒன்றுக்கொன்று சமமாகும். எ-று. (55)

அன்பருடைய தன்மை.

மங்குலைம்பதி னாயிரம்யோசனை மயில்கண்டு நடமாடும்
தங்குபானுநூ றாயிரம்யோசனை தாமரை முகம்விள்ளும்
திங்களாதவற் கிரட்டியோசனையுறச் சிறந்திடு மாங்காம்பல்
எங்கணாயினு மன்பரா யிருப்பவ ரிதயம்விட் டகலாரே.

இ-ள். ஐம்பதினாயிரம் யோசனை தூரத்திலுள்ள மேகத்தைக் கண்டு மயில் நடனம் பண்ணும்; நூறாயிரம் யோசனை தூரத்திலுள்ள சூரியனைக் கண்டு தாமரை முகமலர்ச்சியைக் காட்டும்; இருநூறாயிரம் யோசனை தூரத்திலுள்ள சந்திரனைக் கண்டு செவ்வல்லி மலர்ந்து சிறப்படையும். எவ்வளவு தூரத்தி லிருப்பவராயினும் அன்பரா யிருப்பவர் இருதயத்தை விட்டு அகலார்கள். எ-று. (56)

பிரயோசனமில்லாதன.

சந்திர னில்லா வானந் தாமரை யில்லாப் பொய்கை
மந்திரி யில்லா வேந்தன் மதகரி யில்லாச் சேனை
சுந்தரப் புலவ ரில்லாத் தொல்சபை சுதரில் வாழ்வு
தந்திக ளில்லா வீணை தனமிலா மங்கை போலாம்.

இ-ள். சந்திரனில்லாத ஆகாயம், தாமரை யில்லாத தடாகம், மந்திரி யில்லாத அரசன், மலைபோலும் மதயானை யில்லாத சேனைகள், அழகிய வித்வான்களில்லாத சபை, மக்களில்லாத வாழ்க்கை, தந்தி நரம்பில்லாத வீணை இவை யாவும் இரண்டு ஸ்தனங்களுமில்லாத மங்கையர் சுகம்போல் வீணாகும். எ-று. (57)

அடைவதற்கரியன.

குரைகடல் வறுமையுங் குறத்தி யுண்மையும்
நரையற மருந்தையுண் டிளமை நண்ணலும்
விரைசெறி குழலினுள் வேசை யாசையும்
அரையரன் பமைவது மைந்து மில்லையே.

இ-ள். சப்திக்காநின்ற சமுத்திரத்திற்கு ஜல தரித்திரமும், திருடுந் தொழிற் கற்ற குறத்திகளின் சத்தியமும், நரை திரைக ளறும்படி அவிழ்தமுண்டு பாலப் பருவ மடைதலும், வாசனை செறிந்த கூந்தலை யுடைய வேசியர்களுக்கு ஒருவர்மேலுண்மை யான ஆசை யுண்டாதலும், அரசர்கள் ஒருவரிடத்தில் நீங்காத அன்புடையவரா யிருத்தலும் ஆகிய இவைகள் ஐந்தும் அடைவதற் கரியன. எ-று. (58)

வலியாரைத் தெய்வங்கொல்லும்.

முடவனை மூர்க்கன் கொன்றால் மூர்க்கனை முனிதான் கொல்லும், மடவனை வலியன் கொன்றால் மறலிதா னவனைக் கொல்லும், தடவரை முலைமா தேயித் தாரணியி லுள்ளோர் தம்மில், மடவனை யடித்த கோலும் வலியனை யடிக்குங் கண்டாய்.

இ-ள். முடவனை அகங்கார குணமுள்ள மூர்க்கன் கொன் றால் அம் மூர்க்கனை அவனிலும் அதிக கோபமுடைய ஒருவன் கொல்லுவான். அறிவில்லாத ஏழையை வலியுள்ளவன் கொல்வா னாகில் அவனை எமன் கொல்லுவான். விசாலித்த மலைபோலும் தனத்தை யுடையவளே! இப் பூமியிலுள்ளவர்களுக்குள் ஏழையை அடித்த கோலே பலவானையும் அடிக்கும். எ-று. (59)

பணமில்லாதவன் பிணம்.

பொருளில்லார்க் கின்ப மில்லை புண்ணிய மில்லை யென்று
மருவிய கீர்த்தி யில்லை மைந்தரிற் பெருமை யில்லை
கருதிய கரும மில்லை கதிபெற வழியு மில்லை
பெருநிலந் தனிற்சஞ் சாரப் பிரேதமாய்த் திரிகு வாரே.

இ-ள். பொருளில்லாதவர்க்கு இன்பம், புண்ணியம், பொருந்திய கீர்த்தி, மக்களாற் பெருமை, நினைத்தபடி காரிய முடிக்கும் வல்லமை, மோட்ச மடையும்வழி இவைகள் கிடையா. அவர் பெருத்த உலகத்தில் நடக்கும் தன்மையுள்ள பிணமென்று பிறர் சொல்லும் படி திரிவார். எ-று. (60)

துர்ச்சனர் தக்கோராகார்.

தூம்பினிற் புதைத்த கல்லுந் துகளன்றிச் சுடர் கொடாது
பாம்புக்குப் பால்வார்த் தென்றும் பழகினு நன்மை தாரா
வேம்புக்குத் தேன்வார்த் தாலும் வேப்பிலை கசப்பு மாறா
தாம்பல நூல்கற் றாலுந் துர்ச்சனர் தக்கோ ராகார்.

இ-ள். வழியில் பலபேர் மிதிக்கும்படி புதைத்த கல்லானதும் களங்கத்தோடிருக்குமேயன்றித் தேய்ந்து பிரகாசத்தைக் கொடாது; பாம்புக்குப் பாலை வார்த்துத் தினந்தோறும் அதனுடன் பழகி வந்தாலும் அது நன்மையைத் தராது; வேம்புக்குத் தேனை வார்த்து அதனை வளர்த்தாலும் அதின் இலை கசப்பு மாறாது; துற்சனர்கள் பல நூற்களைக் கற்றாலும் நல்லோராகார். எ-று. (61)

நம்பப் படாதோர்.

கல்லாத மாந்தரையுங் கடுங்கோபத் துரைகளையுங் காலந்
தேர்ந்து, சொல்லாத வமைச்சரையுந் துயர்க்குதவாத்
தேவரையுஞ் சுருதி நூலில், வல்லாவந் தணர்தமையுங்
கொண்டவனோ டெந்நாளும் வலது பேசி, நல்லார்போ
லருகிருக்கு மனைவியையு மொருநாளு நம்பொணாதே.

இ-ள். கல்வி யில்லாத மனிதர்களையும், மிகுந்த கோபமுள்ள வரசர்களையும், வருங்கால நிகழ்ச்சி யறிந்து சொல்லாத மந்திரிகளையும், துன்பம் வந்த விடத்து உதவி செய்யாத தெய்வங்களையும், வேதநூலில் வல்லவரில்லாத பிராமணர்களையும், கணவனோடெந்த நாளிலும் வல்லமை பேசி நல்லவர்களைப்போல அருகிலிருக்கும்மனைவியையும் ஒருநாளும் நம்புதல் கூடாது. எ-று. (62)

தீயோர்க்குச் செய்யும் நன்மை தீமையாம்

தேளது தீயில் வீழ்ந்தாற் செத்திடா தெடுத்த பேரை
மீளவே கொடுக்கி ஞலே மெய்யுறக் கொட்ட லேபோல்
ஏளனம் பேசத் தீங்குற் றிருப்பதை யெதிர்கண் டாலுங்
கோளினர் தமக்கு நன்மை செய்வது குற்ற மாமே.

இ-ள் தேளானது நெருப்பில் வீழ்ந்தால் இறந்துபோ மென்று கருதி எடுத்தவரைக் கொடுக்கிஞலே துன்பமுறும்படி கொட்டுதல்போல, பலர் தம்மைக்கண்டு கேலிகள் பேசக் கோளுடையவர் தீங்குகளைக் கொண்டிருப்பதை நேராகப் பார்த்தபோதிலும் உலகத்தில் அக்கோளுடையவர்களுக்கு நன்மை செய்தால் குற்றமே யுண்டாகும். எ-று (63)

அறிவுடையோர் பெருமை.

அறிவுளோர் தமக்கு நாளு மரசருந் தொழுது வாழ்வார்
நிறையொடு புவியி லுள்ளோர் நேசமாய் வணக்கஞ் செய் [வார்
அறிவுளோர் தமக்கு யாதோ ரசடது வருமேயாகில்
வெறியரென் றிகழா ரென்று மேதினி யுள்ளோர் தாமே.

இ-ள். அறிவுடையவர்களை அரசரும் வணங்கி வாழ்வார்கள் ; உலகத்தவர்களும் உண்மையான நேசத்தோடு பணிதல் செய்வார்கள் ; அவருக்கு யாதேனும் ஒரு குற்றம் நேரிட்டாலும் வெறுக்கத் தக்கவரென்று அவரை இவ்வுலகினர் இகழ்ச்சி செய்யார். எ-று. (64)

இரகசியமாகக் காப்பாற்ற வேண்டியன.

குருவுப தேச மாதர் கூடிய வின்பந் தன்பால்
மருவிய நிபாயங் கல்வி வயதுதான் செய்த தர்மம்
அரியமந் திரம்வி சார மாண்மையிவ் விவைக ளெல்லாம்
ஒருவருந் தெரியவொண்ணு வுரைத்திடி லழிந்துபோகும்.

இ-ள். ஆசிரியர் செய்தவுபதேசம், ஸ்திரீயினிடத்தனுபவித்த இன்பம், தன்னிடத்துப் பொருந்திய நியாயம், கல்வி, ஆயுள், தன்னாற்செய்த தருமம், அரிதாகிய மந்திரம், துன்பம், வல்லமை இவைகளெல்லாம் ஒருவருந் தெரியக்கூடா. வெளியிடில் அழிந்து போகும். எ-று. (65)

ஈவது விலக்குவோர்க்குறுவது.

இடுக்கினால் வறுமையாகி யேற்றவர்க் கிசைந்த செல்வங்
கொடுப்பதே மிகவு நன்று குற்றமே யின்றி வாழ்வார்
தடுத்ததை விலக்கினோர்க்குத் தக்கநோய் பிணிக ளாகி
உடுக்கவே யுடையு மின்றி யுண்சோறும் வெல்ல மாமே.

இ-ள். துன்பமடைந்து தரித்திரத்தால் யாசிப்பவருக்கு மனமகிழப் பொருள் கொடுப்பதே மிகவும் நல்லது ; அப்படிக் கொடுப்பவர்கள் குறைவின்றி வாழ்வார்கள் ; கொடுக்கின்றதைத் தடுத்து விலக்குகின்றவர்களுக்குத் தகுதியான துன்பந்தரத்தக்க பிணியுண்டாகி உடுக்கத் துணியுமின்றிச் சாப்பிடுவதற்குரிய அன்னமுங் கிடையாமல் வெல்லம்போ லருமையாகும். எ-று. (66)

மெய்பொய்களின் தாரதம்மியம்.

மெய்யதைச் சொல்வா ராகில் விளங்கிடு மேலு நன்மை
வையக மதனைக் கொள்ளும் மனிதரிற் றேவ ராவர்
பொய்யதைச் சொல்வா ராகிற் போசன மற்ப மாகும்
நொய்யவ ரிவர்க ளென்று நோக்கிடா ரறிவு ளோரே.

இ-ள். மனிதர் மெய்சொல்வாராயின் அவரிடத்து மேலும் மேலும் நன்மையே விளங்கும் ; உலகத்தவரும் அவருடைய அந்த வார்த்தையை ஒப்புக்கொள்வார்கள் ; அவரே மனிதரில் தெய்வமாவார். பொய் பேசுவாராயின் அவருக்கு உணவும் அற்பமாம் ; இவர்கள் பெருந்தன்மை யுடையவர்க ளல்லவென்று மதித்து அறிவுடையோர்கள் அவரைப் பாரார்கள். எ-று. (67)

தந்தைதாய் குருதெய்வம் பேணாதவர்.

தந்தையுரை தட்டினவன் றாயுரை யிகழ்ந்தோன்
அந்தமுறு தேசிகர்த மாணையை மறந்தோன்
சந்தமுறு வேதநெறி தாண்டினவன் நால்வர்
செந்தழலின் வாயினிடை சேர்வதுமெய் கண்டீர்.

இ-ள். மனிதரே! தகப்பன் சொல்லைத் தள்ளி நடந்தவன், தாயார் வார்த்தையை யிகழ்ச்சி செய்தவன், அழகிய குருவி னாஞ்ஞையை மறந்தவன், சந்தமுள்ள வேதநெறிகளைக் கடந்தவன் ஆகிய இந்நால்வரும் சிவந்த அக்கினிவாயின்கண் ணடைவது உண்மையென்றறியக் கடவீராக. எ-று. (68)

நடுநிலையுடையார்.

நாரிகள் வழக்கா னாலு நடுவறிந் துரைப்பார் சுத்தர்
எரிபோற் பெருகிமண்மே லிருகணும் விளங்கி வாழ்வார்
ஓரமே சொல்வா ராகி லோங்கிய கிளையு மாண்டு
தீரவே கண்ணிரண்டுந் தெரியாமல் மாள்கு வாரே.

இ-ள். தம்மிடம் வருவது ஏழைப்பெண்கள் முறையிட்ட வழக்குகளா யிருக்கினும் நடுநிலைமையறிந்து நியாயம் சொல்பவரே பரிசுத்தர். அவர்கள் பெரிய தாடகம்போல் பெருகி பூமியின்மேல் இரண்டு கண்ணும் பிரகாசித்து வாழ்வார்கள். மனிதர் பட்சபாதமாகத் தீர்ப்புச்சொல்லுவரேல் அவர்கள் சுற்றமிழந்து இருவிழிகளுந் தெரியாத குருடராய் மயங்கி மரண மடைவார்கள் எ-று. (69)

ஒரு கலவி விநோதம்

துப்புறச் சிவந்த வாயாள் தூயபஞ் சணையின் மீதில்
ஒப்புறக் கணவ னோடே யோர்லீலை செய்யும் போது
கற்பகஞ் சேர்ந்த மார்பிற் கனதன மிரண்டுந் தைத்தே
அப்புற முருவிற்றென்றே யங்கையாற் றடவிப்பார்த்தாள்.

இ-ள். பவளநிறம் பொருந்தச் சிவந்த வாயையுடையவள் பரிசுத்தமான பஞ்சணையின்மீது தன் கணவனோடு மனமொப்ப ஒப்பற்ற கலவிசெய்யுங் காலத்தில் அவ்வாறு சேர்ந்த தன் நாயகனது கல்விக்கிருப்பிடமாகிய மார்பில் பருத்த தனங்களிரண்டுந் தைத்துப் பின்புறம் ஊடுருவிப் போய்விட்டதென்று தன்னழகிய கைகளால் தடவிப்பார்த்தாள். எ-று. (70)

பட்சமற்றால் உறவறும் என்பது.

ஏரிநீர் நிறைந்த போதங் கிருந்தன பட்சி யெல்ல
மாரிநீர் வறண்ட போது வந்ததி லிருப்ப துண்டோ
பாரினை யாளும் வேந்தன் பட்சமு மறந்த போதே
யாருமே நிலையில் லாம லவரவ ரேகு வாரே.

இ-ள். தடாகத்தில் ஜலமிருக்கும்போது அங்குக் கூடியிருந்தனவாகிய பக்ஷிகளெல்லாம் மழைநீரானது வற்றியபோது, அங்கிருப்பதுண்டோ? இல்லை. அதுபோல உலகத்தையாளும் அரசன் பக்ஷத்தை மறந்தபோது ஒருவரும் அவனிடத்தில் நிலைத்திருத்தலில்லாமல் அவரவர்கள் பட்சமுள்ளவிடந்தேடிச் செல்வார்கள். எ-று. (71)

உலுத்தர் தன்மை.

மண்ணார் சட்டி கரத்தேந்தி மறநாய் கௌவுங் காலினராய், அண்ணாந் தேங்கி யிருப்பாரை யறிந்தே மறிந்தோ மம்மம்மா, பண்ணார் மொழியார் பாலடிசில் பைம்பொற் கலத்திற் பரிந்தூட்ட, உண்ணா நின்ற போதாருவர்க் குதவா மாந்த ரிவர்தாமே.

இ-ள். கையில் மண்சட்டியேந்திப் போகுமிடங்களில் கோபம் பொருந்திய நாய்கள் சீறிப்பாய்ந்து கௌவும் காலுள்ளவராய் எங்கு அன்னங் கிடைக்குமோவென்று ஏங்கிச் சோறுகிடையாமல் அண்ணாந்திருக்கின்றவர்களை அம்மம்மா இன்னவரெனக் கண்டோம் கண்டோம்; அவர் யாரெனில் முற்பிறப்பில் இசைநின்ற வார்த்

தையையுடைய மங்கையர்கள் பொன்கலத்தில் பாலொடு கலந்த அன்னத்தை மிக அன்போடு ஊட்டத் தாம் உண்ணுஞ் சமயத்தில் ஒருவருக்கும் கொடாத உலுத்தர்களே. எ-று. (72)

இன்னார் பாவம் இன்னாரைச் சேரும் என்பது.

மண்டலத்தோர்கள் செய்த பாவமன் னவரைச் சேருந்
திண்டிறன் மன்னர் செய்த தீங்குமந் திரியைச் சேருந்
தொண்டாகள் செய்ததோஷந்தொடர்ந்துதங்குருவைச்சேருங்
கண்டன மொழியாள்செய்த கன்மமுங் கணவர்க் காமே.

இ-ள். உலகத்தவர்கள் செய்தபாவம் அரசரைச்சாரும்; மிக்க வலிமையுள்ள அரசர்கள் செய்த தீமை அமைச்சரைச் சேரும்; அடியார்கள் செய்தகுற்றம் அவர்களுடைய ஆசிரியனைப்பற்றும்; கற்கண்டுபோலும் மொழியையுடைய மங்கையர்கள் செய்த பாவம் தம் புருடர்களுக்காகும். எ-று. (73)

இம்மையிற் சுவர்க்கம் இவையெனல்.

நற்குண முடைய வேந்தை நயந்துசே வித்த லொன்று
பொற்புடைமகளி ரோடு பொருந்தியே வாழ்த லொன்று
பற்பல ரோடு நன் னூல் பகர்ந்துவா சித்த லொன்று
சொற்பெறுமிவைகண் மூன்று மிம்மையிற் சுவர்க்கந் தானே.

இ-ள். நல்ல குணமுடைய அரசனை விரும்பித் தரிசித்தல் ஒன்று; குல அழகுடைய ஸ்திரீகளோடு கூடிவாழ்தல் ஒன்று; கல்விமான்களன பல நல்லாசிரியரிடத்து மாணுக்கர் பலரோடும் நல்ல நூல்காப்படித்துப் பொருள்களைக்கேட்டுச் சந்தேகமறப் பயின்று கற்க்கொள்ளுதல் ஒன்று; ஆகிய இந்தப் புகழ்பெற்ற மூன்று காரியங்களும் இகத்தில் அனுபவிக்கத்தக்க சுவர்க்கபோகங் களாம். எ-. (74)

கலியாணம் கவலைக்கிடமாம் என்பது.

நிட்டையிலே யிருந்துமனத் துறவடைந்த பெரியோர்க ணிமலன் றாளைக், கிட்டையிலே தொடுத்துமுத்தி பெறு மளவும் பெரியசுகங் கிடைக்குங் காம, வெட்டையிலே மதி மயங்குஞ் சிறுவருக்கு மணம்பேசி விரும்பித் தாலி, கட்டை யிலே தொடுத்துநடுக் கட்டையிலே கிடத்துமட்டுங் கவலை தானே.

இ-ள். சதா நிட்டையிலேயிருந்து பற்றுநீங்கி மனதின்கண் துறவடைந்த பெரியோர்களெல்லாம் பரமபதியின் பாதத்தைத் துதிக்க அடுத்ததுமுதல் மோட்சத்தை அடையும்வரையில் அவர் களுக்குப் பெரிதான ஆனந்தமே கிடைக்கும். கன்னியர்கள் காம மென்னும் வெப்பத்திலே புத்திமயங்கிக் கிடப்பவர்களாகிய சிறு வர்க்கு, விவாகமுறைபேசி ஒரு பெண்ணை விருப்பத்தோடு தாலி கட்டுவதுமுதல் அவர்கள் இறந்து சுடுகாட்டிலடுக்கிய கட்டைகளின் நடுமத்தியில் கொண்டுபோய் அவர்களை வைக்கும்வரையில் கவ லையே அதிகரித்துக்கொண்டிருக்கும். எ-று. (75)

தலைவியை நினைந்து தலைமகன் வருந்துதல்.

அன்னம் பழித்த நடை யாலம் பழித்தவிழி யமுதம் பழித்த மொழிகள், பொன்னம் பெருத்தமுலை கன்னங் கருத்தகுழல் சின்னஞ் சிறுத்த விடையா, ளென்னெஞ் சுருக்கவவ டன்னெஞ்சு கற்றகலை யென்னென் றுரைப் பதினிகான், சின்னஞ் சிறுக்கியவள் வில்லங்க மிட்டபடி தெய் வங்க ளுக்கபயமே.

இ-ள். அன்னத்தை யிகழ்ந்த நடையையும், விஷத்தை நிந் தித்த கண்களையும், அமிர்தத்தைப் பழித்த சொற்களையும், பொன் போலுந் தேமல்படர்ந்த அழகிய பருத்த தனங்களையும், மிகக் கருநிறமா யிருண்ட கூந்தலினையும், கண்டவர்கள் அதி நுட்ப மென்று மதிக்கும்படி மிகவுஞ் சிறுத்த இடையினையுமுடைய பெண்ணனவள், எனது மனதை யுருக்க, அவள் தன் நெஞ்சிற்

கற்றுக்கொண்ட சாத்திர வல்லபத்தை இனி நானென்னென்று சொல்லுவேன்? மிகச் சிறுவயதையுடைய அவள் இவ்வாறு எனக்கு வில்லங்கஞ் செய்தவிதம் தெய்வங்களினிடம் நான் முறையிடக் கூடியதாயிருக்கிறது. எ-று. (76)

பாவிக்குத் துன்பம் தொடர்ச்சியாக வருமென்பது.

ஆவீன மழைபொழிய வில்லம் வீழ அகத்தடியாள் மெய்நோவ அடிமை சாவ, மாவீரம் புலர்ந்ததென விதை கொண் டோட வழியிலே கடன்காரன் மறித்துக் கொள்ளக், கோவேந்த ருழுதுண்ட கடமைகேட்கக் குருக்கள் வந்து தட்சணைக்குக் குறுக்கே நிற்கப், பாவாணர் கவிபாடிப் பரிசு கேட்கப் பாவிமகன் படுந்துயரம் பார்க்கொ ணாதே.

இ-ள். பாவியாகிய ஒரு மனிதன் தன்னுடைய பசு கன்றைப் பெற, மழைவிடாது பெய்ய, வீடு இடிந்துவிழ, வீட்டுக்குரிய மனைவி கருப்ப வேதனைப்பட, வேலையாள் இறக்க, ஈரங் காய்ந்துவிட்ட தென்று விதைக்க விதைகொண்டோட, வழியில் கடன்காரன் தன்னை மறித்துக்கொள்ள, அந்தச் சமயத்தில் வேளாண்மை செய்து சாப்பிட்ட பூமிகளின் தீர்வையைத் தரும்படி தன்னை அரசர் கேட்க, அதுகாலைக் குருக்கள்வந்து தக்ஷணை வாங்குதற்குக் குறுக்கே நிற்க, கவிகளைப்பாடி வித்வான்கள் தன்னிடம் சன்மானங் கேட்க அளவற்ற துன்பத்தை அடைவான். அப்பாவி மகன் அடையுந் துன்பம் சகிக்கமுடியாது. எ-று. (77)

ஒருவனுக்கு இன்னதன்மை யுடையார் பகைவராவாரெனல்

தாய்பகை பிறர்நட் பாகில் தந்தையும் நுணவா ளுகில், மாய்பகை மனைவி யாரும் மாவழ குற்ற போது, பேய் பகை பிள்ளை தானும் பெருமைநூல் கல்லா விட்டால், சேய் பகை யொருவற் காகு மென்றனர் தெளிந்த நூலோர்.

இ-ள். ஒருவனுக்குத் தாய் தன்மீதன்பில்லாமல் பிறர்மீதன் புடையவளா யிருந்தால் பகையாவள்; பிதா அதிகக் கடன்பட்ட

வனுயிருந்தால் பகையாவான்; மனைவி மிகுந்த அழகுள்ளவளா யிருந்தால் பகையாவாள்; பிள்ளை பெருமையான சாஸ்திரங்களைக் கற்றுக்கொள்ளாதவனு யிருந்தால் அச்சேயும் பகைக்கத்தக்க பேய் போல் பகையாவான் என்று நன்றாயறிந்த கிரந்த கர்த்தர்கள் சொல்லி யிருக்கிறார்கள். எ-று. (78)

செல்வமற்றால் பந்துத்துவ மறும் என்பது.

நிலைதளர்ந் திட்ட போது நீணிலத் துறவு மில்லை
சலமிருந் தகன்ற போது தாமரைக் கருக்கன் கூற்றம்
பலவன மெரியும் போது பற்றுதீக் குறவாங் காற்று
மெலிவது விளக்கே யாகில் மீண்டுமக் காற்றே கூற்றாம்.

இ-ள். நீர் நிறைந்த தடாகத்திலுள்ள தாமரைப் புஷ்பத் திற்கு அக்காலத்தில் சிநேகிதனுயிருந்த சூரியனே, அது நீரைவிட் டகன்ற காலத்திலே எமனாய் அதனை நாசஞ்செய்வான்; பலம் பொருந்திய காட்டில் தீ பற்றியெரிந்து பெருநெருப்பாய் விளங்கும் போது அவ்வாறு பற்றிய நெருப்புக்குக் காற்று உதவியாயிருக்கும்; அத்தீ மெலிந்த சொரூபமாகிய விளக்காகில் அதற்கு அக்காற்றே எமனாகி அதனை அவித்துவிடும். இவைபோல மனிதர் செல்வநிலை தளர்ந்தகாலத்தில் உறவாயிருந்தவரும் உறவில்லாமற் போய்விடு வார். எ-று. (79)

கொடுப்பதால் குறைவும், கோடாததால் நிறைவும் இல்லை யெனல்.

மடுத்தபா வாணர் தக்கோர் மறையவ ரிரப்போர்க் கெல்லாங், கொடுத்தியார் வறுமை யுற்றார் கொடாதுவாழ்ந் தவரார் மண்மேல், எடுத்துநா டுண்ட நீரு மெடாதகாட் டகத்து நீரும், அடுத்தகோ டையிலே வற்றி யல்லதிற் பெரு குந் தானே.

இ-ள். நாட்டிலுள்ள ஜனங்களால் எடுத்துண்ணப்பட்ட குளத்து நீரும், அவ்வாறு எடுத்தருந்தப்படாத காட்டு நீர் நிலையிலுள்ள நீரும் (அவ்வாறு எடுத்தருந்தப்படுதலால் குறைதலும், எடுத்தருந்தப்படாததால் நிறைதலுமில்லை;) அவை யிரண்டும் அடுத்து வரும் வேனிற் காலத்திலே வற்றி, அஃதல்லாத மாரிக்காலத்திலே பெருகும்; இவைபோல மனத்திலே நிறைந்த கவிகளாலே வாழக் கூடிய வித்வான்கள், நற்குணமுள்ள பெரியோர், வேதங் கற்றவர், யாசிப்பவர் ஆகிய இவர்களுக்கெல்லாம் இந்தப் பூமியின்மேல் பொருளைக்கொடுத்து வறுமையுற்றவரெவர்? (ஒருவருமில்லை); கொடாமல் செல்வத்திற் சிறந்து வாழ்ந்தவரெவர்? (எவருமில்லை); பொருட் குறைவும் நிறைவும் இவற்றால் நேர்வனவல்ல; அவை இயற்கையாக நேருங்காலத்தில் நேரும். எ-று. (80)

காமன் எவரையுந் துன்புறுத்தாது விடானெனல்.

உணங்கி யொருகால் முடமாகி யொருகண் ணின்றிச் செவியிழந்து, வணங்கு நெடுவா லறுப்புண்டு மன்னு முதுகில் வயிறொட்டி, அணங்கு நலிய மூப்பெய்தி யகல்வா யோடு கழுத்தேந்திச், சுணங்கன் முடுவல் பின்சென்றால் யாரைக் காமன் றுயர்செய்யான்.

இ-ள். வாடி ஒரு கால் நொண்டியாகி ஒரு கண்ணில்லாமல் காதறுப்புண்டு வளைகின்ற நெடிய வாலறுபட்டுப் பொருந்திய முதுகில் வயிறானது சுருங்கி ஒட்டி, வியாதியானது வருத்தமுப்படைந்து திறந்தவாயோடு கழுத்தை மேலே தூக்கி அப்பொழுதும் மன்மத வாதையால் மனஞ்சுழன்று ஒரு ஆண்நாயானது பெட்டைநாயின் பின்னே செல்லும்; (அதுவும் அவ்வாறு) சென்றால் மன்மதனானவன் எவரைத்தான் துன்புறுத்தமாட்டான்? (எல்லோருக்குமே துன்பத்தைச் செய்வான்). எ-று. (81)

கொடியவர் இயற்கை.

கன்மனப் பார்ப்பார் தங்களைப் படைத்துக் காகத்தை யென்செயப் படைத்தாய், துன்மதி வணிகர் தங்களைப் படைத்துச் சோரரை யென்செயப் படைத்தாய், வன்மன வடுகர் தங்களைப் படைத்து வானர மென்செயப் படைத் தாய், நன்மனை தோறும் பெண்களைப் படைத்து நமனை யென் செயப்படைத் தனையே.

இ-ள். (நான்முகனே!) உலகத்தில் கல்போன்ற நெஞ்சை யுடையவர்களாகிய பிராமணர்களை, கொடுமை செய்வதற்குப் படைத்திருந்தும் காகத்தை என்ன கொடுமைசெய்யும் பொருட்டு உண்டாக்கினாய்? பிறர் பொருளைக் கவரும் துற்புத்தியுடைய வணிகரைப் பலர் பொருளைக் கவரும் பொருட்டுப்படைத்தும், கள்வரை எந்தச் சோரத்தனம் செய்வதற்கு உண்டாக்கினாய்? கடியநெஞ்சம் பொருந்திய வடுகரை இரக்கமற்ற செய்கை செய்வதற்குப் படைத் திருந்தும் குரங்கை எத்தகைய துஷ்டச்செய்கை செய்வதற்கு உண்டாக்கினாய்? நல்ல வீடுகள்தோறும் புருஷரைக் கொலைசெய் யப் பெண்களைப் படைத்தும், யமனை வேறு எந்தக்கொலைத்தொழில் செய்தற்குச் சிருஷ்டித்தாய்? (இவர்கள் இத்தொழில்களுக்கு ஏற் பட்டிருக்கும்போது காகம் வானரம் ஆகியவைகளும், சோரர், யமன் ஆகியவர்களும் தேவையில்லையே). எ-று.

(இவர்கள் காகம், வானரம் ஆகியவற்றைக் காட்டிலும், சோரர், யமன் ஆகியவர்களைக் காட்டிலும் கொடுமை செய்வார்கள் என்பது இதிற் குறிப்பிடப்பட்டது. (82)

நாயகனைப் பிரிந்த தலைவி உண்ணல் முதலியவற்றை விரும்பா ளென்பது.

உண்ணல்பூச் சூடனெஞ் சுவத்த லொப்பனை
பண்ணலெல் லாமவர் பார்க்க வேயன்றோ
அண்ணல்தன் பரிவினை யறிந்துந் தோழிநீ
மண்ணவந் தனையிது மடமை யாகுமால்.

இ-ள். எனது தோழியே! நான் நல்ல உணவுகளை உண்ணு தல், மலர் சூடுதல், மனமகிழுதல், அலங்காரம் செய்துகொள்ளுதல் ஆகிய இவைகளெல்லாம் என் நாயகராகிய அவர் பார்த்துத் திருப்தி யடைவதற்கேயல்லவா செய்யப்படுவன; அப்படியிருக்க அவர் அவற்றைப் பார்ப்பதற்கு இங்கே யில்லாமல் இப்போது பிரிந்திருக் கின்றார்; அவ்வாறு நீங்கிய அந்தப் பெருமையிற் சிறந்தவருடைய பிரிவினை நீ அறிந்திருந்தும் என்னை அலங்கரிக்க வந்தனை; இது பேதைமையான செய்கையாகும். எ-று.

(இது, நாயகனைப் பிரிந்திருந்த தலைவி, அச்சமயத்தில் தன்னை அலங்கரிக்க வந்த தோழியைப் பார்த்துக் கூறியதாகும்; இதனால் நாதனைப் பிரிந்த உத்தம ஸ்திரீகள் அலங்காரம் முதலியவற்றை விரும்பாரென்பது விளங்கும்.) (83)

பெண்களை நம்பலாகா தெனல்.

கோளரி யடர்ந்த காட்டிற் குறங்கில்வைத் தமுத மூட்டித், தோளினிற் றாக்கி வைத்துச் சுமந்துநண் பா வளர்த்த, ஆளனைக் கிணற்றிற் றள்ளி யணங்கொரு முட வற் சேர்ந்தாள், காளநேர் கண்ணி னாரைக் கனவினு நம் பொ ணாதே.

இ-ள். ஒருத்தி, கொலைத் தொழில் பொருந்திய வெவ்விய சிங்கங்கள் அமர்ந்துவாழுங் கானகத்தில் தன்னைத் துடையிலிருத்தித் தனக்கன்னமூட்டித் தோளிற் றாக்கிச் சுமந்து அன்பாக வளர்த்து வந்த புருடனைக் கிணற்றிற் றள்ளி ஓாழகில்லாத முடவனைக் கூடினாள்; ஆதலால் விடத்துக்கொப்பான கண்ணுடைய மங்கை யரைக் கனவிலும் நம்புதல் தகாது. எ-று. (84)

பெண்கோள்வது கூடாதேன்பது.

சேய்கொண்டா ருங்கமலச் செம்மலுட னேயரவப்
பாய்கொண்டா ரும்பணியும் பட்டீச் சுரத்தானே
நோய்கொண்டா லுங்கொளலாம் நூறுவய தாமளவும்
பேய்கொண்டா லுங்கொளலாம் பெண்கொள்ள லாகாதே.

இ-ள். சிவந்த நிறத்தைக்கொண்டு விளங்குந் தாமரை மலரி லுள்ள பெருமையிற் சிறந்தவனாகிய பிரமதேவனும், ஆதி சேடனாகிய பாயைக் கொண்ட மஹாவிஷ்ணுவும் வணங்கித் துதிக்கும்படியான திருப்பட்டீச்சுரத்தலத்தில் எழுந்தருளிய சிவ பெருமானே! ஒருவன் நூறு வயதளவும் வியாதியைக் கொண் டாலும் கொள்ளலாம், பேயைக் கொண்டாலும் கொள்ளலாம்; பெண்களைக் கொள்ளல் ஆகாது. எ-று. (85)

விஷயமறியாதோரிடத்துப் பேசுவதின் பயன்.

நான மென்றிட வர்த்தகர் வேடுவர் நாவிலுண் பது வென்ன, ஊன ருந்துவோய் மடந்தைய ரணிவதா முயர் முலைத் தலை யென்ன, ஆன தைத்தனம் பூசினால் விங்கிப தமையுமோ வெனக்கேட்கக், கான வேட்டுவச் சேரிவிட் டகன்றனர் கடிகமழ் பொருளாய்வோர்.

இ-ள். வர்த்தகர் வேடுவரிடத்தே சென்று நானம் வேண்டு மென, வேடர் அது நாவினால் சுவைத்துச் சாப்பிடத்தக்க பதார்த்தமோ சொல்வீரென்ன, (வர்த்தகர்) ஊனுண்பவனே! ஸ்திரீகள் விசாலித்த தனத்தினிடத்தே மேலே யணிந்துகொள்ளும் வாசனைத்திரவியமென்ன, (வேடர்) அவ்வாறானதைக் கொங்கையில் பூசினால் அது வீக்கம்கொண்டது அமுங்கிவிடுமோவென்ன, வாசனை வீசுகின்ற பொருளை ஆராய்ந்து விற்கும் (வர்த்தகர்) அக் கானகத்திலுள்ள வேடர் குடியிருப்பைவிட்டு நீங்கினர். எ-று. (86)

மானிடவின்பம் இத்தகைத்தெனல்.

கொண்டு விண்படர் கருடன்வாய்க் கொடுவரி நாகம்
விண்ட நாகத்தின் வாயினில் மேவிய தேரை
மண்டு தேரையின் வாயினி லகப்படு வண்டு
பண்டு தேனுக ரின்பமே மானிட வின்பம்.

இ-ள். கருடன் வாயினிடத்தே கொண்டு ஆகாயத்திற் பறந்து சென்ற வளைந்த இரேகையையுடைய நாகமும், கூறிய அந்நாகத்

தின் வாயில் அகப்பட்ட தேரையும், நெருங்கிய அத்தேரையின் வாயில் தேனை உட்கொள்ளும் நிலையில் அகப்பட்ட வண்டும், முன்னொரு காலத்தில் அனுபவித்த இன்பமே இவ்வுலகத்திலுள்ள மனிதர்களனுபவிக்கும் இன்பம். எ-று. (ஒரு கருடன் ஒரு பாம்பைத் தின்னும் பொருட்டுக் கௌவிக்கொண்டு பறக்க, அப் பாம்பு ஒரு தேரையைத் தின்ன வாயிற் கொண்டிருக்க, அத்தேரை ஒரு வண்டைத் தின்னுதற்குக் கௌவிக்கொண்டிருக்க, அவ் வண்டு வாயில் வீழ்ந்த தேனை யுண்ணத் தொடங்கிற்று என்பது ஒரு கதை. பாம்பும், தேரையும், வண்டும் சாகுந்தறுவாயிலிருந்தும் தங்கள் வாயிலகப்பட்ட உணவை யுண்டு இன்பத்தை யனுபவிக்க நினைத்ததைப்போலும் இடரான வாழ்க்கையிலகப்பட்ட மானிடர் இன்ப மனுபவிக்க நினைப்பது என்பது இதன் கருத்து.) (87)

மூடர்குண மாறுதேன்பது.

கற்பூரப் பாத்திகட்டிக் கஸ்தூரி யெருப்போட்டுக் கமழ் நீர் பாய்ச்சிப், பொற்பூர வுள்ளியினை விதைத்தாலும் தன் குணத்தைப் பொருந்தக் காட்டும், சொற்பேதை யருக்கறிவிங் கினிதாக வருமெனவே சொல்லினாலும், நற்போதம் வாராதங் கவர்குணமே மேலாக நடக்குந் தானே.

இ-ள். கற்பூரத்தால் வரப்புகளிட்டுப் பாத்திகட்டிக் கஸ்தூரியையே எருவாகத்தூவி, வாசனை நீரையே பாய்ச்சி, அழகுண்டாக ஈருள்ளியை அதில் நட்டுவைத்தாலும், அது தன் குணத்தையே செவ்வையாய்க் காண்பிக்கும். அதுபோல சொல்லத்தக்க அறிவில்லாதவர்க்கு இனிமையாக அறிவு வருமென்று எவ்வளவு நீதிகளைச் சொன்னாலும், நல்ல குணமானது சற்றும் வாராது ; அப்போதும் அவர்கள் தீயகுணமே மேலாக நடக்கும். எ-று. (88)

கண்ணயப் புரைத்தல்.

தண்டு லாவிய தாமரைப் பொய்கையில்
மொண்டு நீரை முகத்தரு கேந்தினள்
கெண்டை கெண்டையென் றக்கரை யேறினள்
கெண்டை காண்கிலள் நின்று தயங்கினள்.

இ-ள். தாள்களமைந்த தாமரைத் தடாகத்திலுள்ள தண்ணீரைக் கையால்முகந்து தன் முகத்தினருகே யேந்திப் பார்த்த ஒரு பெண் (அதனுட்டெரிந்ததன்) கண் நிழலைப்பார்த்துக் கெண்டை கெண்டையென்று கூவிக்கொண்டே கரையிலேறினள். அவ்வாறு ஏறிப் பார்த்தபொழுது அக்கெண்டைமீனைக் காணாதவளாய் நின்று மயங்கினாள். எ-று. (89)

கெருவியர் நட்பு கூடாதென்பது.

மருவு சந்தனக் குழம்புபல் சுவையுணு வளம்பெற வமைத்தாலுஞ், சருவ வையமா மனமுள மாதரைத் தழுவலு மாகாதே, பருவ தங்கள்போற் பலபல நவமணிப் பைம்பொனை யீந்தாலுங், கெருவ மிஞ்சிய மானிடர் தோழமை கிட்டலு மாகாதே.

இ-ள். பொருந்திய சந்தனக் குழம்பு முதலிய வாசனைத் திரவியங்களையும், பலவித சுவை யுணவுகளையும், அழகுபெறச் சேகரித்துத் தந்தாலும் எதிலுஞ் சந்தேகங்கொள்ளும் மனமுள்ள மாதர்களை யணைதல் தகாது. மலைகளைப்போல அநேக நவரத்தினங்கள் அழுத்திய பசிய பொன்னுபரணங்களைக் கொடுத்தாலும் கெருவம் மிகுதியுள்ள மனிதர்களின் சிநேகம் எவ்வளவும் கொள்ளுதல் கூடாது. எ-று. (90)

தலைவி வனப்புரைத்தல்.

நிலத்தலை நீரின் மூழ்கி நின்றவ டன்னை நோக்கிக்
குலத்தலை மஞ்ஞை நாணிக் கூவெனக் காவி லேக
முலைத்தலை யதனைக் கண்டு மும்மதக் கரிவந் துற்ற
தலைத்தலை சிங்க மென்றக் களிறுகண் டேகிற் றம்மா.

இ-ள். பூமியினிடத்து ஜலத்தில் முழுகி நின்றவளாகிய ஒரு மங்கையை, கூட்டமாயிருந்த சிரேஷ்டம் பொருந்திய மயில்கள் நேரே பார்த்து அவள் சாயலுக்கு வெட்கிக் கூவென்றலறிச் சோலையிற்புக, அவளுடைய தனச்சிகரத்தைக்கண்டு மும்மதங்

களைப் பொழியா நின்ற யானை தன் இனமென்றோடிவந்தது. அசைதல் பொருந்திய இடமாகிய அவளிடை சிங்கமென்று பயந்து அந்த யானை ஓடிப்போயிற்று. எ-று. (91)

வீண் மனோராஜ்ஜிய முடையார் தன்மை.

கரியொரு திங்கட் காகுங் கானவன் மூன்று நாளாம்
இருதலைப் புற்றில் நாக மின்றுணு மிரையா மென்று
விரிதலை வேடன் கையில் விற்குதை நரம்பைக் கவ்வி
நரியனுர் பட்ட பாடு நாளைநாம் படுவ மாதோ.

இ-ள். வீண் மனோராஜ்ஜியம் செய்யும் மனிதர்களே! ஒரு வேடன் புற்றின் மீதேறி நின்று யானையின்மீது பாணப்பிரயோகம் பண்ணித் தானொரு இருதலை நாகத்தாற்கடியுண்டு அந்நாகத்தை வெட்டிவிட்டு இறக்க, யானையும் பாணத்தாலிறந்து கிடக்கக்கண்டு யானையோ, ஆறுமாதத் துணவாகும்; வேடனே மூன்றுநா ளுண வாவான்; புற்றிலிருந்த இருதலை நாகமோ இன்றுண்ணும் இரை யாகும் என்று சந்தோஷித்துக் கொண்டே விரிந்த தலையையுடைய வேடனது கையிலிருந்த வில்லின் குதை நரம்பைக் கடித்து அது அறுபட அந்த விற்குதை பாய்ந்ததனுலிறந்த அந் நரி பட்ட பாடு போலவே நாளை நாம் இறந்து துன்புறுவோம். எ-று. (92)

காததூரமேனும் நற்பெயர் பரவ வாழாதார்க்குச் சிறப்பில்லையெனல்.

பூதலத்தின் மானிடராய்ப் பிறப்பதரி தெனப்புகல்வர்
பிறந்தோர் தாமும், ஆதிமறை நூலின்முறை யருள்கீர்த்தி
யொடுந் தலங்க ளன்பாய்ச்சென்று, நீதிவழு வாதவகை வழக்
குரைத்து நல்லோரை நேசங் கொண்டு, காதவழி பேரிலரேல்
கழுதையெனப் பாரிலுள்ளோர் கருது வாரே.

இ-ள். ஒருவர் உலகத்தில் மானிடராய்ப் பிறப்ப தரிதெனப் பூமியிலுள்ள பெரியோர்கள் சொல்வார்கள்; அப்படிப் பிறந்தவர் களும் முதன்மையான வேத சாத்திரங்களின் முறைப்படி கிருபை,

புகழ் ஆகிய இவற்றோடு ஸ்தல யாத்திரைசெய்து நியாயந் தவறாத படி வழக்குகள் தீர்த்துச் சொல்லி நல்லோர்களுடன் உறவு கொண்டு நல்லவர்களென்று காதவழி தூரமேனும் பேர் எடாராயின் அவர்களைக் கழுதைப் பிறப்பென்றே கருதி யிகழ்வார்கள். எ-று. (93)

ஓரஞ் சொல்வோர் கெடுவரென்பது.

ஆரம் பூண்ட மணிமார்பா வயோத்திக் கரசே யண்ணாவே, ஈரமிருக்க மரமிருக்க இலைக ளுதிர்ந்த தெதைநிகர்க்கும், வாரங் கொண்டு வழுத்துமென வாய்த்த விளைஞன் வலி பேசி, ஓரஞ் சொன்ன குடியதுபோ லுதிர்ந்த வெனமூத் தோருரைத்தார்.

இ-ள். இராமரைப் பார்த்துத் தம்பி, மாலையணிந்த அழகிய மார்பையுடைய அயோத்திக் கரசரே! அண்ணாவே! ஈரமிருக்க மரமிருக்க அதின் இலைகள்மட்டும் உதிர்ந்தது எதைப் போலும் என்று கேட்க, அதற்கு மூத்தோராகிய அவர், வலிமைபேசிப் பட்சபாதமாய்த் தனது வல்லமையினால் ஓர வஞ்சனையாக வழக்குத் தீர்த்தவர் குடிபோல உதிர்ந்து கிடக்கின்றன இவை என்றுரைத்தார். எ-று. (94)

புல்லர்களுக்குச் செய்யும் உபகாரம் தீமைபயக்கு மென்பது.

வல்லியந் தனைக்கண் டஞ்சி மரந்தனி லேறும் வேடன்
கொல்லியற் பசியைத் தீர்த்திரட் சித்த குரங்கைக்கொன்றான்
நல்லவன் றனக்குச் செய்த நலமது நன்மை யாகும்
புல்லர்கள் துணைசெய் தாரி னுயிர்தனைப் போக்கு வாரே.

இ-ள். புலியைக்கண்டு பயந்து ஓர் விருக்ஷத்திலேறிய வேடனது உயிரைப்போக்கத் தக்க பசியைத் தீர்த்து அவனை இரட்சித்த குரங்கை அவ்வேடனே கொன்றான். அவனைப்

போலவே அற்பர்கள் தமக்குதவி செய்தவருடைய உயிரைப் போக்குவார்கள். நல்லவனுக்குச் செய்த உதவி நன்மையாக முடியும். எ-று. (95)

வள்ளற்றன்மை யுடையார் இன்னவரேன்பது.

தன்மானங் குலமானந் தன்னிடம்வந் தடைந்தவர்கள் தங்கண் மானம், என்மான மாகிலென்ன வெல்லாருஞ் சரி யெனவே யெண்ணம் போந்து, நன்மானம் வைத்தெந்த நாளுமண்மே லுள்ளவர்க்கு நன்மை செய்வோர், மன்மான மடைந்தோரைக் காக்கின்ற வள்ளல்களா வழுத்த லாமே.

இ-ள். ஒரு மனிதனுக்குத் தன்பெருமை, தான் பிறந்த ஜாதிய பிமானம், தன்னிடம் வந்து அடைந்தவர்களுடைய மானம் முத லியவைகளில் எந்தமான மானாலும் என்ன வித்தியாசம்? எல் லோரும் சமமானவர்களே என்று எண்ணமுண்டாகி, நல்லபிமானம் வைத்து எந்தக்காலத்திலும் பூமியிலுள்ளவர்க்கு நன்மைசெய்யத் தக்கவர்கள் யாரோ அவர்கள், பொருந்திய மானமுள்ளவர்களை அபயமென்றடைந்தபோது இரட்சிக்கத்தக்க வள்ளல்களென்று சொல்லலாம். எ-று. (96)

கசடர் இன்னவரேன்பது.

தன்னைத்தான் புகழ்வோருந் தன்குலமே பெரி தெனவே தான் சொல் வோரும், பொன்னைத்தான் றேடிய றம் புரியாம லதைக்காத்துப் பொன்றினோரும், மின்னைப் போன் மனையாளை வீட்டில்வைத்து வேசைசுகம் விரும்பு வோரும், அன்னைபிதா பாவலரைப் பகைப்பாரு மறிவில் லாக் கசட ராவார்.

இ-ள். தன்னையே புகழ்கின்றவர்களும், தன் ஜாதியே பெரி தென்றுரைப்பவர்களும், பொருளைத்தேடித் தருமஞ்செய்யாமல் புதைத்துவைத்துக் காத்து இறப்பவர்களும், மின்னலைப்போலும்

(தேகக்காந்தியுடைய) மனைவியை வீட்டில்வைத்துப் பரத்தையர் போகத்தை இச்சிக்கிறவர்களும், தாய்தந்தை வித்வான்கள் முதலியோரை விரோதித்துக் கொள்பவர்களுமாகிய இவர்கள் புத்தியில்லாத கீழ்மக்களாவார்கள். எ-று. (97)

பெண்சொல்கேட்கும் பேடியர் இயல்பு.

பெண்டுகள்சொற் கேட்கின்ற பேயரெனுங் குணமூடப் பேடி லோபர், முண்டைகளுக் கிணையில்லார் முனைவீர புருடரென மொழியொ ணாதே, உண்டுலக முதிப்பாருள் கீர்த்தியற மின்னவெனு முணர்வே யில்லார், அண்டினவர் தமைக்கெடுப்பா ரழிவழக்கே சொல்வதவ ரறிவு தானே.

இ-ள். மங்கையர் சொற்களைக்கேட்கின்ற பேயர்களென்னும் மூடகுணமுள்ள பேடிகளாகிய உலோபிகள், விதவைகளுக்கும் இணையாகமாட்டார்கள்; இவர்களைத் துணிவுள்ள வீரபுருடர்களெனச் சொல்லல் கூடாது; முன் ஜன்மத்தில் இன்பதுன்பங்களை அனுபவித்து உலகத்தில் பிறந்தவர்களுள் இவர்கள் புகழும், தருமமும் இன்னவையென்று ஆராய்ந்து அறியும் அறிவேயில்லாதவர்; அடுத்தவர்களைக் கெடுப்பவராவார்; நியாயத்தைவிட்டு நியாய விரோதமான அழிவழக்குப் பேசுவதே இவர்கள் புத்தியாகும். எ-று. (98)

நல்லோர் பொல்லார் இயற்கைகள்.

பொல்லார்க்குக் கல்விவரில் கெர்வமுண்டா மதனோடு பொருளுஞ் சேர்ந்தால், சொல்லாதுஞ் சொல்லுவிக்குஞ் சொற்சென்றூற் குடிகெடுக்கத் துணிவர் கண்டாய், நல்லோர்க்கிம் மூன்றுகுண முண்டாகி லருளதிக ஞான முண்டாம், எல்லோர்க்கு முபகார ராயிருந்து பரகதியை யெய்து வாரே.

இ-ள். துர்க்குணமுடையவர்களுக்குக் கல்வியுண்டாகில் கருவ மதிகப்படும்; அக்கல்வியோடு செல்வமுங்கூடினுல் சொல்லத்தகாத வார்த்தைகளேயும் அவரைச் சொல்லும்படி செய்யும்; அவர்களு டைய சொல் எங்குஞ் செல்லத்தகுந்ததா யிருந்தால் அவர்கள் குடிகளேக் கெடுக்கவுந் துணிவார்கள்; நற்குணமுடையார்க்குக் கல்வி, செல்வம், சொற்செல்லுதல் ஆகிய இந்த மூன்று முண்டா கில் அருளும் அதிக ஞானமு முண்டாகும்; அவர்கள் யாவருக்கும் உபகாரிகளாக விருந்து முத்தியடைவார்கள். எ-று. (99)

தலைவி நலங்கூறல்.

உந்தியின் சுழியின் மேற்சே ருரோமமாங் கரிய நாகஞ்
சந்திர னெனவே யெண்ணித் தையலாள் முகத்தை நோக்க
மந்திர கிரிகள் விம்மி வழிமறித் திடுதல் கண்டு
சிந்துரக் கயற்க ணோடிச் செவிதனக் குரைத்த தம்மா.

இ-ள். எனது தலைவியாகிய மங்கையினது உந்திச்சுழியாகிய நாபியின் மேற்சேர்ந்திருக்கின்ற உரோமக்கொடியாகிய கரிய நாக மானது, (அவளுடைய) வதனத்தைச் சந்திரனென்றுகருதி மேல் நோக்க, தனங்களாகிய மந்தரமலைகள் நெருங்கி வழியைத் தடுத்துக் கொள்ளுதலைப்பார்த்துச் செவ்வரிபடர்ந்த கயலைப்போலுங் கண்கள் ஓடிச் செவிகளுக்குச சொல்லின. எ-று. (இதனுல் தலைவி அழகிய மயிரொழுங்கினேயும், சந்திரன்போன்ற முகத்தையும், பருத்து நெருங்கிய தனங்களேயும், காதளவு நீண்ட கண்களேயும் உடையவ ளென்பது குறிக்கப்பட்டது.) (100)

இதுவுமது.

மாகமா மேடை மீதில் மங்கைநின் றுலாவக் கண்டு,
ஏகமா மதியென் றெண்ணி யிராகுவந் துற்ற போது, பாகு
சேர் மொழியி னளும் பதறியே பாதம் வாங்கத், தோகைமா
மயிலென் றெண்ணித் தொடர்ந்தரா மீண்ட தன்றே.

இ-ள். வானமளாவிய மேடைமீதில் எனது தலைவியாகிய மங்கை நின்று உலாவ அவளுடைய முகத்தைக்கண்டு ஒப்பற்ற சிறந்த பூரணச்சந்திரனென்று நினைத்து, (சந்திரனுக்குப் பகையாகிய) இராகுவென்னுங் கரும்பாம்பானது வர, அப்படி வந்து நெருங்கியபோது சர்க்கரைப்பாகின் சுவைசேர்ந்த மொழியையுடைய அவள் மனம்பதறித் தனது பாதங்களை யெடுத்துவைத்து நடக்க, (அவளைத்தொடர்ந்த அப்பாம்பு, அவள் சாயலைக்கண்டு) மயிலென்று பயந்து திரும்பிவிட்டது. எ-று. (இதனால், தலைவி சந்திரன்போன்ற முகத்தையும், மயில்போன்ற சாயலையு முடையவளாயிருந்தாளென்பது குறிப்பிடப்பட்டது.) (101)

பெரியோர் தன்மை.

சலதாரை வீழு நீருஞ் சாகரந் தன்னைச் சார்ந்தாற், குல
மென்றே கொள்வ தல்லாற் குரைகடல் வெறுப்ப துண்டோ,
புலவர்கள் சபையிற் கூடிப் புன்கவி யாளர் சார்ந்தால், நல
மென்றே கொள்வ தல்லால் நவில்வரோ பெரியோர் குற்றம்.

இ-ள். சலதாரையில் ஒழுகும் நாற்றமுள்ள தண்ணீரும் சமுத்திரத்திற் புகுந்தால் அதை, சப்திக்கின்ற அச்சமுத்திரம் தன்னினமென்று ஏற்றுக் கொள்ளுவதல்லாமல் வெறுத்துத் தள்ளுவதுண்டோ? இல்லை. (அதுபோல்,) பெரிய வித்துவான்கள் நிரம்பிய சபையில் நூற் கேள்வியில்லாத அற்பக் கவிஞர்கள் வந்து சேர்ந்தாலும் அவர்கள் சொல்லை நல்லதென்று ஏற்றுக்கொள்ளுவதல்லாமல் அப்பெரியோர்கள் அதற்குக் குற்றஞ் சொல்வார்களோ? (இல்லை.) எ-று. (102)

கலவி பாராட்டல்.

காரெனுங் குழற்குத் தப்பிக் கண்சிலை வாளி தப்பி
மேரென வளர்ந்து நின்ற வேழத்தின் கோடு தப்பித்
தாருறு கரிய ரோமச் சங்கிலி வழியே சென்று
சீரிய னென வளர்ந்த செல்வனல் குலிற்கை வைத்தான்.

இ-ள். சிறப்புற்றவனென வளர்ந்த என் தலைவனாகிய செல்வன் தன்னை வருத்தத்தக்க மேகமென்னுங் கூந்தலுக்குத் தப்பி, புருவமாகிய வில்லைச் சார்ந்த கண்களாகிய கொடிய அம்புகளுக்குத் தப்பி, மகமேருபோல் வளர்ந்து நின்ற முலைகளாகிய யானைத் தந்தங்களுக்குந் தவறி, ஒழுங்கு பொருந்திய உரோமமாகிய சங்கிலியின் வழியே சென்று, எனது அல்குலாகிய பாம்புப் படத்திற் கரங்களை வைத்தான். எ-று (இது, தலைவி கூற்று) (103)

பெண் அங்கத்தின் இழிவு.

உண்டதை யொழிக்கும் வாச லோரநீ ரொழித்து மேலே
வண்டலு மழுக்குஞ் சேரு முதிரமு மாறு வாசல்
உண்டத னிருப்பைக் கண்டு பெருங்களி யுள்ளங் கொண்டு
கண்டன ரிளைஞர் மேலாங் கதியெனக் கருது வாரே.

இ-ள். உண்டவுணவுகளை ஜீரணிக்கச்செய்து வெளியிற் றள்ளும் குதவாயிலை யடுத்து உவர் நீரொழுக்கி மேலே அசுத்தமாகிய சேறும் அழுக்கும் சேருகின்ற இரத்தம் மாறாத வாசல் ஒன்றுண்டு. அதனிருப்பைப் பார்த்தவர்களாகிய வாலிபர்களெல்லாம் அதைக் கண்டு பெருத்த சந்தோஷத்தை மனதிற்கொண்டு, இதுவே மேலான மோட்சமென்று கருதுகின்றார்கள். எ-று. (104)

எல்லாம் கடவுள் செயல்படி நடக்குமென்பது.

காந்தொருவன் கணைதொடுக்க மேற்பறந்த ராசாளி
கருத்துங் கண்டே, ஊரந்துசிறு கானகத்தி லுற்றபுறா பேடு
தனக் குரைக்குங் காலை, விரைந்துவிடந் தீண்டவுயிர் விட
வேடன் கணையால்வல் லூறும் வீழ்ந்த, தான்செயலை யாவ
தல்லாற் றன்செயலா லாவதுண்டோ வறிவுள் ளோரே.

இ-ள். ஒரு வேடன் ஒரு சிறுகாட்டில் ஒளித்திருந்து தங்கள் மீது வலிமையோடு கணைதொடுக்க, தங்களைக் கொல்லுதற்கு மேலே பறந்து கொண்டிருந்த இராஜாளியின் எண்ணத்தையுங் கண்டு பயந்திருந்த புறாக்களிரண்டில் ஆண் புறாவானது பெட்டைப் புறாவைப் பார்த்து, 'நம்மைப் பக்ஷிக்கக்கருதி பூமியில் வேடன்

அம்பெய்கிருன் ; ஆகாயத்தில் இராஜாளிப்பட்சி பறக்கின்றது; நாம் யாது செய்வோ'மென்று விசனப்பட்டுச் சொல்லும்போது அவ்வேடனைப் புதரிலிருந்த பாம்புகடித்து அதனாலவனிறக்க, அவன் கையில்லிலிருந்து விடுபட்ட அம்பினால் மேற்பறந்த ராஜாளி இறந்து வீழ்ந்தது. ஆதலால் கடவுள் செயலே ஆவதல்லாமல் மனிதனுக்குத் தன் செயலா லொன்று மாவதில்லை. எ-று. (105)

கலவி விநோதம்.

கொல்லுலை வேற் கயற்கண் கொவ்வையங் கனிவாய் மாதே
நல்லணி மெய்யிற் பூண்டு நாசிகா பரண மீதிற்
சொல்லரிற் குன்றி தேடிச் சூடிய தென்னோ வென்றான்
மெல்லியல் கண்ணும் வாயும் புதைத்தனள் வெண்முத்
[தென்றாள்.

இ-ள். ஒரு தலைவன் தலைவியுடன் கூடும்போது அவள் நாசியிலணிந்திருந்த முத்து, அவளுடைய இதழின் சிவப்பினால் குன்றிமணிபோல தோற்ற, அவன் அவளை நோக்கி, "கொல்லனுலையிற்காய்ச்சிக் கூர்மைசெய்த வேலாயுதத்தையும், கெண்டைமீனையு மொத்த கண்களும், கொவ்வைப்பழம் போன்ற செவந்த வாயுமுள்ள பெண்ணே! நல்ல ஆபரணங்களைத் தேகத்திலணிந்து நாசியினாபரணத்தில் சொல்லுகின்ற குற்றம் பொருந்திய குன்றி மணியைத் தேடிப் புனைந்தது யாதுகாரணம்?" என்றான். மெல்லிய தன்மையுடைய அப்பெண் வெட்கித் தனது கண்ணையும் செவ்வாயையும் மூடிக்கொண்டவளாய் வெள்ளைமுத்தென்று சொன்னாள். எ-று. (106)

தலைவன் தலைவியின் நயங்கூறுதல்.

அருகிலிவ ளருகிலிவ ளருகில்வா வுருகுங்
கரியகுழன் மேனியிவள் கானமயில் சாயல்
பெரியதனஞ் சிறியவிடை பேதையிவ ளையோ
தெருவிலிவ ணின்றநிலை தெய்வமென லாமே.

59036

இ-ள். கருப்பு நிறம்பொருந்திய கூந்தலையும், அழகிய மேனியையும், உடைய இவளது சாயல் கானமயிலைப்போலும்; பாரித்த தனங்களையும், சிறுத்த விடையினையுமுடைய இப்பெண்ணானவள் பக்கத்தில் வரவர மனமான தருகும். ஐயோ! வீதியில் இவள் நிற்கும் நிலையை நோக்கில் இவளைத் தெய்வப் பெண்ணென்றே சொல்லலாம். எ-று. (107)

பாங்கி தலைவி நயப்புரைத்தல்.

அலகு வாள்விழி யாயிழை நன்னுதற்
றிலகங் கண்டெதிர் செஞ்சிலை மாரனுங்
கலக மேசெயுங் கண்ணிது வாமென
மலரம் பைந்தையும் வைத்து வணங்கினன்.

இ-ள். கூர்மை பொருந்திய வாளாயுதத்தை யொத்த கண்களையுடைய எங்கள் தலைவியினது நல்ல நெற்றியிலுள்ள பொட்டினழகை, செவ்விய வில்லையுடைய மன்மதன் எதிரே கண்டு நம்மைக் கொன்று கலகம் விளைவிக்கும் சிவனுடைய நெற்றிக் கண் இதுவாகுமென்று நினைத்துத் தன் பாணங்களாகிய ஐந்து மலரையும் அவள் முன்னே வைத்து வணங்கினன். எ-று. (108)

அறிவிலார் செயல்.

குரங்கு நின்றுகூத் தாடிய கோலத்தைக் கண்டே
அரங்கு முன்புநாய் பாடிக்கொண் டாடிய வதுபோல்
காங்க ணீட்டியே பேசிய கசடரைக் கண்டு
சிரங்க ளாட்டியே மெச்சுத லறிவிலார் செய்கை.

இ-ள். ஒரு ஆட்ட மேடையிலே குரங்கு கூத்தாடி நின்ற அழகைப் பார்த்து ஒரு நாய் சந்தோஷித்துத் தானும் அவ்வாறாடக் கருதி ஊளைப்பாட்டுப் பாடி ஆடியதுபோல, கைகளை நீட்டிப் பேசும் மூடர்களைக் கண்டு தலைகளை ஆட்டி அவர்களை மெச்சிக் கொள்வது அறிவில்லார் தொழில். எ-று. (109)

விஷமெனக் கருதத் தக்கவை.

வில்லது வளைந்த தென்றும் வேழம துறங்கிற் றென்றும்
வல்லியம் பதுங்கிற் றென்றும் வளர்கடா பிந்திற் றென்றும்
புல்லர்தஞ் சொல்லுக் கஞ்சிப் பொறுத்தனர் பெரியோ
[ரென்றும்
நல்லதென் றிருக்க வேண்டாம் நஞ்செனக் கருத லாமே.

இ-ள். வளைந்த வில்லைப்பார்த்து வில் வளைந்திருக்கிறது, அது கெடுதி செய்யாதென்றும், உறங்கும் யானையைப் பார்த்து யானை நித்திரை செய்கிறது அதனால் கெடுதி செய்யாதென்றும், புலி பதுங்குவதைப் பார்த்துப் புலி பதுங்கிவிட்டது தீங்கு செய்யா தென்றும், வளர்கின்ற ஆட்டுக்கடா பின் வாங்குவதைப் பார்த்துக் கடா பின் வாங்கிற்று கெடுதி செய்யாதென்றும், கீழ் மக்கள் நிந்தனையைக் கேட்டுப் பெரியோர் பொறுத்திருப்பதைப் பார்த்து அவர்கள் தங்கள் சொல்லுக்குப் பயந்து பெரியோர் பொறுமை யோடிருக்கின்றார்கள்; ஆகையால் இவர்களால் கெடுதி யொன்றும் நேராதென்றும், இவற்றாலுண்டாவது நல்லதேயென்றும் கருதி யிருக்க வேண்டாம். இவற்றின் தன்மை நஞ்சென்று கருதலாம். எ-று. (110)

நட்பின் விசேடம்.

சலந்தனிற் கிடக்கு மாமை சலத்தைவிட் டகன்ற போது
கொலைபுரி வேடன் கண்டு கொடுவிலிற் கொண்டு செல்ல
வலுவினா லவனை வெல்ல வகையொன்று மில்லை யென்றே
கலையெலி காகஞ் செய்த கதையென நண்பர் செய்வார்.

இ-ள். தண்ணீரிலிருந்த ஓராமை நண்பனுக்குத் துணை செய்யக் கரையில் வந்தபோது அதைக்கொல்லுந் தொழிலையுடைய ஒரு வேடன் பார்த்துப் பிடித்து வளைந்த வில்லிலிட்டுக் கட்டிக் கொண்டுபோக அந்த ஆமைக்குப் பிராண சிநேகிதமுள்ளவைகளா யிருந்த மானும், எலியும், காகமும், தங்கள் வல்லமையினால் அவ்

வேடனை ஜெயிக்க யாதொரு வகையுமில்லையென்று நினைத்துச் செய்த தந்திரம் பொருந்திய கதையைப்போல நண்பர் ஒருவருக் கொருவர் உதவிசெய்வார். எ-று.

(வேடன் ஆமையைக் கொண்டு செல்லும் போது மான் செத்ததுபோற் கிடந்தது. காகம் மானைக் குத்திக் கொண் டிருந்தது. வேடன் ஆமையை வைத்து விட்டு மானருகிற் சென்றான். எலி ஆமையின் கட்டை அறுத்துவிட்டது. ஆமை தண்ணீருக்குள் போயிற்று. மானும் எழுந்தோடிவிட்டது. காகமும் பறந்தது. எலியும் ஓடிவிட்டது. இது பஞ்ச தந்திரக் கதை.) (111)

நல்லோர் தீயோரியல்பு.

நிலமதிற் குணவான் றோன்றி னீள்குடித் தனரும் வாழ்வார்
தலமெலாம் வாசந் தோன்றுஞ் சந்தன மாத்திற் கொப்பான்
நலமிலாக் கயவன் றோன்றி னற்குலந் தேசம் பாழாங்
குலமெலாம் பழுது செய்யுங் கோடரிக் காம்பு நேர்வான்.

இ-ள். உலகத்தில் நல்ல குணமுடையவன் பிறந்தால் அவனால் அவன் குலத்திலுள்ள நீண்ட குடித்தனமுடையவர்களெல்லோரும் வாழ்வார்கள். அவன், எத்திசையினும் வாசனை மணக்கும் சந்தன மாத்திற் கொப்பாவான்; நன்மையில்லாத கீழ்மகன் உதித்தால் அவன் குலமும் தேசமும் பாழடையும்; அவன், தன் குலத்திற் கெல்லாம் கெடுதி செய்யும் கோடரிக்காம்பு போலாவான். எ-று. (112)

நரகிற் சேர்பவர்.

நட்பிடைக் குய்யம் வைத்தார் பிறர்மனை நலத்தைச் சேர்ந்தார், கட்டழற் காமத் தீயாற் கன்னியைக் கலக்கி னோரும், அட்டுயி ருடலந் தின்றோ ரமைச்சரா யரசு கொன் றோர், குட்டநோய் நரகந் தம்மிற் குளிப்பவ ரிவர்கள் கண் டாய்.

இ-ள். சிநேகத்தில் வஞ்சகம் செய்தவரும், அயலான் மனைவி இன்பத்தை யிச்சித்து அவளைச்சேர்ந்தவரும், தொகுதியான வெப்

பத்தையுடைய காமாக்கினியால் கன்னியைக் கற்பழித்து அவளைக் கலியாணஞ் செய்துகொள்ளாமல் கலங்கச்செய்தவரும், உயிர்களைக் கொன்று அவற்றினுடலைத் தின்றவரும், அமைச்சராயிருந்து அரசனைக்கெடுத்தவர்களும் ஆகிய இவர்களே குஷ்ட நோயிலும், நரகத்திலும் மூழ்கி வருந்தக்கூடியவர்கள். எ-று. (113)

பெண் துரோகம் பெருந்துயர் செய்யுமென்பது.

மதியிலா மறையோன் மன்னன் மடந்தையை வேட்கை யாலே, துதிருது காலந் தன்னிற் றோஷமென் றுரைத்தே யாற்றில், புதுமையா யெடுத்த போது பெட்டியில் புலிவா யாலே, அதிருடன் கடியுண் டன்றே யருநர கடைந் தான் மாதோ.

இ-ள். விவேகமற்ற ஓர் பிராமணன் தன்னிடத்தில் கல்வி பயின்று வந்த இராஜகுமாரத்தியை, அவள் மீதேற்பட்ட மோகத்தாலே அவள் புஷ்பவதியான காலத்தில், "இவளால் மிகவுந்தோஷமுண்டாகும்; இவளைப் பெட்டியில் வைத்து ஆற்றில் விட்டுவிட வேண்டும்" என்று அவள் தந்தையிடம் சொல்லி, அவன் அவ்வாறே செய்ய, வேட்டையாடி வந்த ஒரு அரசன், அப்பெட்டியைப் பார்த்தெடுத்துத் திறந்து அதற்குள்ளிருந்த அக்கன்னிகையை அழைத்துக்கொண்டு, வேட்டையிலகப்பட்ட புலியை யதிற்போட்டுப் பூட்டி பழையபடி ஆற்றில் விட்டுவிட, பின்பு தான் அந்தப்பெட்டியைக்கண்டு அதை யெடுத்து ஆசையுடன் திறக்க அப்பெட்டிக்குள்ளிருந்த புலியின் வாயாலே அப்பிராமணன் அதிர்ச்சியுடன் கடியுண்டிறந்து அரிய நரகத்தை யடைந்தான். எ-று. (114)

வலிமையில்லா மிரட்டுதலால் அழிவுண்டாகு மேன்பது.

மையது வல்லி யம்வாழ் மலைக்குகை தனிற் புகுந்தே
ஐயமும் புலிக்குக் காட்டி யடவியிற் றூத்துங் காலை
பையவே நரிக்கோ ளாலே படுபொரு ளுணர்ந்துகொண்டு
வெய்யவம் மிருகந் தானே கொன்றிட வீழ்ந்த தன்றே.

இ-ள். ஓராட்டுக் கடாவானது புலியிருக்கும்படியான ஒரு குகைக்குட்புகுந்து அப்புலியை ஒருவிதமாய் மிரட்டி, அதற்குச் சந்தேகத்தை யுண்டாக்கி அதைத் துரத்திய காலத்தில், எதிரில் வந்த ஒருநரியின்கோளால் வெவ்விதாகிய அப்புலியானது பைய நேர்ந்த விஷயத்தின் உண்மையைத் தெரிந்துகொண்டு அவ்வாட்டின்மேல் பாய்ந்து அதைக்கொல்ல அந்த ஆட்டுக்கடா இறந்தது. எ-று. (115)

பெண் புத்தி கேட்பது பிராணுபத்தாம் என்பது.

மங்கைகை கேசியின்சொற் கேட்டதனல் தசரதனு
மாண மாஞன், செங்கமலச் சீதைசொல்லே ஸ்ரீராமன் கேட்ட
வுடன் சென்ருன் மான்பின், தங்கையவள் சொற்கேட்ட
ராவணனுங் கிளேயோடு தானு மாண்டான், நங்கையர் சொற்
கேட்பதனற் கேடுவரும் பேருலகோர் நகைப்பர் தாமே.

இ-ள். தசரதன், கைகேசியென்னும் மனைவி சொற்கேட்டு மரணமடைந்தான்; ஸ்ரீராமபிரான் செந்தாமரையில் வீற்றிருக்கும் இலக்குமியாகிய ஜானகி சொற்கேட்டு மான்பின்சென்று வருந்திஞன்; இராவணன் தன் தங்கையாகிய சூர்ப்பனகையின் சொற்கேட்டுத் தன் சுற்றத்தோடு தானும் மாண்டான். ஆதலால், ஸ்திரீகள் சொற் கேட்பதனல் துன்பமேயுண்டாகும்; அப்படிக்கேட்பவர்களேப் பார்த்து உலகத்தவரும் நகைப்பார்கள். எ-று. (116)

நல்ல நட்பின் தன்மையும், தீயநட்பின் தன்மையும்.

அருமையும் பெருமை தானு மறிந்துடன் படுவர் தம்மால்
இருமையு மொருமை யாகு மின்புறத் கேது வுண்டாம்
பரிவிலாச் சகுனி போலப் பண்புகெட் டவர்க டம்மால்
ஒருமையி னிரய மெய்து மேதுவே யுளதா மன்றே.

இ-ள். மனிதருடைய அருமையையும் பெருமையையுமறிந்து உடன்பட்டுச் சிநேகஞ் செய்துகொண்டவர்களால், இம்மை மறுமையாகிய இருமையினும் ஒரே விதமாகும் இன்பத்தையடைவதற்

கேதுவுண்டாகும் ; அன்பில்லாத சகுனியைப்போல நேசங்கெட்டவர்களுடைய கூட்டுறவால் ஒரு பிறப்பிலேயே நரகமடையும் ஏதுவே யுண்டாகும். எ-று. (117)

பொய்யுடம்பும் புகழுடம்பும்.

ஒருவனே யிரண்டு யாக்கை யூன்பொதி யான நாற்ற
உருவமும் புகழு மாகு மவற்றுளே யின்ப முற்று
மருவிய யாக்கை யிங்கே மாய்ந்திடு மற்ற யாக்கை
திரமதா யுலக மேத்தச் சிறந்துபின் னிற்கு மன்றே.

இ-ள். உலகத்தில் ஒருவன் பொருந்திய உடம்புகள் இரண்டாம் ; அவை மாமிசச் சுமையான நாற்றவடிவமும், புகழுமாகும். அவற்றுள் அவன் இவ்வுலக வின்பங்களை நுகர்வதற்கேதுவாய்ப் பொருந்திய நாற்றம்பொருந்திய மாமிசப்பிண்டமாகிய பொய்யுடம்பு இவ்வுலகத்திலேயே நிலையின்றி மாய்ந்துவிடும். மற்ற புகழுடம்போவெனில், நிலையாய் என்று மழியாமல் உலகமெங்கும் கொண்டாடச் சிறந்து அவன் இறந்தபின்னரும் நிற்கும். எ-று. (118)

உரியாரே கெடுதிசெய்ய நினைத்தால் அதை விலக்குவாரேவருமில்லை யென்பது.

வேலி யானது பயிர்தனை மேய்ந்திட வமைந்தால்
கால னுனவ னுயிர்தனைக் கவர்ந்திட நினைத்தால்
ஆல மன்னையர் பாலகர்க் கருத்துவ ராளுல்
மேலி தோர்ந்துடன் யார்கொலோ விலக்குவர் வேந்தே.

இ-ள். அரசனே! காவலாக ஏற்பட்ட வேலியே பயிரை மிருகங்கள் மேய இடங்கொடுத்தால், எமன் உயிரைக்கவர நினைத்தால், கொல்லத்தக்க விஷத்தைத் தாய்மார்களே பிள்ளைகளுக்கு ஊட்டினுல், இவ்வுலகத்தின் மேலே இச்செயல்களால் நேரும் தீமையாகிய இதை யறிந்து தடுப்பவர் யார்? எ-று (119)

வேசியர் நட்பால் விளையுந் தீமைகள்.

அறங்கெடு நிதியுங் குன்று மாவியு மாயுங் காய, நிறங்கெடு மதியும் போகி நீண்டதோர் நரகஞ்சேரு, மறங்கெடு மறையோர் மன்னர் வணிகர்நல் லுழவோ ரென்னூர், குறங்கெடு வேசை மாதர் குணங்களை விரும்பி னோர்க்கே.

இ-ள். கெடுதிநீங்கிய சாந்த குணத்தையுடைய வேதியர், அரசர், வைசியர், நல்ல உழவினர் என்னும் ஜாதி வித்தியாசம் பாராதவர்களும், எல்லோருக்கும் சேர்க்கையைக் கொடுக்கின்றவர்களுமாகிய பரத்தையரின் நடிப்புக் குணங்களை இச்சித்தவர்களுக்குத் தருமங்கெடும், செல்வங்குறையும், உயிரழியும், தேககாந்தியுமாறும், புத்தியுங் கெட்டு நீண்டதோர் நரகமும் சித்திக்கும். எ-று. (120)

இரண்டு சகோதரிகள் தங்களைக் கலந்த இரண்டுபேர்களின் இயல்பைக் கூறிக்கொண்டது.

அரவிந்த நண்பன் சுதனறம்பி மைத்துனன் அண்ணன் கையில், வாமுந்தி யாயுதம் பூண்டவ னென்றொரு மாது சொல, பரமன் றிகிரியை யேந்திய மைந்தன் பகைவன் வெற்பை, யுரங்கொண் டெடுத்தவ னுற்று னெனத்தங்கை யோதினளே.

இ-ள். இரண்டு சகோதரிகளில் மூத்தவளாகிய ஒருத்தி, தன்னிடம் கூடவந்த ஒருவனைக்குறித்துத் தங்கையிடம் சொல்லத் தொடங்கி, "தங்காய்! என் வீட்டிற்கு வந்தவன் தாமரைக்குச் சிநேகிதனாகிய சூரியன் புத்திரனாகிய கர்ணன் தம்பி அர்ச்சுனன் மைத்துனனாகிய கிருஷ்ணனுக்குத் தமையன் பலராமன் கையில் முந்தி வரம்பொருந்தியுள்ள ஆயுதமாகிய கலப்பையைப் பூண்டிருப்பவன் (எருமைக்கடா) என்று சொல்ல, தங்கை தன்னிடம் வந்தவனைக் குறித்துச் சொல்லத்தொடங்கி, "தமக்காய்! என் வீட்டிற்கு சிவபெருமான் வசிக்கும் கயிலைமலையை யெடுத்த வலிமையுள்ளவனாகிய விராவணனுக்குப் பகைவனும், (ஸ்ரீராமபிரானுக்கு தாசத்து

வம் பூண்டு அவ்விராவணனோடு பகைத்து) பர்வதங்களை யெல்லாம் வலிமைகொண்டு இலேசாகப் பெயர்த் தெடுத்தவனுமாகிய ஆஞ்ச நேயன் (குரங்கு) வந்துசேர்ந்தான்'' என்று சொன்னாள். எ-று. ()

இரண்டு நண்பர்கள் தாங்கள் கூடிய மங்கையர்களி னியல்பைக் கூறிக்கொண்டது.

சங்கரன் றேவி தமையன் மனைவி தனக்குமுன்னும்
மங்கையர் வாகனம்வாய்த்தன ளென்னவொருவன்மற்றோன்
கொங்கைக ளீரைந் துடையவ ளாமெனைக் கூடியவள்
எங்குந் திரியும் வயிரவ வாகன மென்றனனே.

இ-ள். பொருந்தாத இரண்டு மாதர்களைக்கூடிய நண்பர்களில் ஒருவன் தான்கூடிய மாதைப்பற்றித் தன் நண்பனிடம் கூறத்தொடங்கி அவனைப் பார்த்து, "நண்பனே! என்னைச் சேர்ந்தவள், சிவபெருமானுக்கு நாயகியாகிய பார்வதியின் தமையனாகிய விஷ்ணுவின் மனைவி இலக்குமிக்கு முன் பிறந்த மங்கையாகிய மூதேவி யேறிய வாகனமாகும் (கழுதையாகும்) என்று சொல்ல, மற்றவன் என்னைக் கூடியவள் எங்குந்திரியும் வயிரவக்கடவுளின் வாகனமான, பத்துத் தனங்களை யுடையவளாவள், (ஊரெங்குந் திரிகிற நாய்) என்று சொன்னான். எ-று. (122)

அந்தணர் கருமங்குன்றில் அனர்த்தமா மென்பது.

இந்திரன் பதங்கள் குன்று மிறையவர் பதங்கள் மாறு
மந்திர நிலைதள் ளாடு மாறிடா வறுமை யாகும்
சந்திரன் கதிரோன் மாறித் தரணியிற் றேய மாளும்
அந்தணர் கருமங் குன்றி லாரிங்கு வாழ்வார் மண்ணில்.

இ-ள். வேதியர்கள் தாங்கள் செய்யத்தக்க கிரியைகளைச் செய்யாதொழிந்தால், இந்திரனது பதவிகள் குறையும்; இராஜாக்களின் பதவிகளும் மாறும்; மலைகள் நிலை பெயரும்; எவ்விடங்களிலும் நீங்காமல் வறுமை மிகுதியாம்; சந்திர சூரியர்கள் திசை மாறிச்செல்லப் பூவுலகத்திலுள்ள தேசங்கள் நாசமாகும்; இங்கே உலகில் எவர் வாழ்வார்? ஒருவருமே வாழார். எ-று. (123)

தலைவி தன் துயரங்கூறல்.

என்னனைக் கன்று முத்தனைக் குனிக்கு மிறையனை யனைக்குமே யன்று, மன்னனைக் கன்றிப் பின்னனைக் குதவா வன்புளால் வருந்திவா டினனே, முன்னனைக் கொன்று பின் னனைப் புரந்த முதுபகை யவன்பிதா வுறுமல், கன்னனைக் கொன்று விசயனைப் புரந்த கவுத்துவ மணிகிருட் டிணனே.

இ-ள். இராமாவதாரத்தில் மூத்தவனாகிய வாலியைக்கொன்று இளையவனாகிய சுக்ரீவனை இரட்சித்த பழமையான, பகையை அவ் வாலியின் றந்தையான இந்திரனடையாமல், பின் பாரதயுத்தம் நடந்தகாலத்தில் கர்ணனைக்கொன்று அந்த இந்திரன் புத்திரனாகிய அர்ச்சுனனை இரக்ஷித்த கௌஸ்துவாபரண மணிந்த கிருஷ்ணனே! என் தாய்க்கு மாத்திரமல்லாமல், முத்துக்குத் தாயான கரும்பை வில்லாகவளைக்கும் மன்மதனுக்குத் தாயாகிய இலக்குமிக்குப் பிறப் பிடமான சமுத்திரத்துக்கு மாத்திரமல்லாமல், பெற்ற தாய்க்கே யன்றிப் பின்வளர்த்த தாய்க்கு முதவாத வலிய குயிற்பட்சியாலும், துன்பமுற்று வாட்டமடைந்தேன். எ-று. (124)

இன்னருக் கின்னது செய்யவேண்டுமெனல்.

பண்புளருக் கோர்பறவை பாபத்திற் கோரிலக்கம்
நண்பிலரைக் கண்டாக்கா னற்காலி-திண்புவியை
ஆள்வார் மதுரை யழகியசொக் கர்க்கரவம்
நீள்வா கனநன் னிலம்.

இ-ள். நற்குணமுள்ளவருக்கு ஒரு பறவை; பாவச்செய் கைக்கு ஓர் எண்; நண்பற்றவரைக் காணில் நான்கு கால்களை யுடைய மிருகம்; வலிமிகுந்த உலகத்தையாள்வோராகிய மதுரை அழகிய சோமசுந்தரேசருக்குப் பாம்பு, அவருடைய நீண்ட வாக னம், நல்ல நிலம். எ-று. (பறவை-ஈ, எண்-அஞ்சு, மிருகம்-விலங்கு, பாம்பு-பணி, சிவன்வாகனம்-விடை, நிலம்-செய். இவற்றை முன் வரும் வாக்கியங்களோடு பொருத்த நற்குணமுள்ளவருக்கு ஈ அதா

வது கொடு, பாபத்திற்கு அஞ்சு, நண்பற்றவரைக் காணில் விலங்கு அதாவது நீங்கு, சோமசுந்தரேசருக்குப் பணிவிடை செய் என முடியும்.) (125)

மும்மூர்த்திகளின் உணவு முதலியன.

சிறுவ னளைபயறு செந்நெற் கடுகு
மறிதிகிரி தண்டு மணிநூற்—பொரியரவம்
வெற்றேறு புள்ளன்னம் வேதனரன் மாலுக்குக்
கற்றுழம் பூவே கறி.

இ-ள். பிரமனுக்குக் கறி பயறு, உணவு செந்நெல், ஆயுதம் தண்டம், பூஷணம் பூணூல், வாகனம் அன்னம், வசிக்குமிடம் தாமரைமலர்; விஷ்ணுவுக்குக் கறி வெண்ணெய், உணவு பூமி, ஆயுதம் சக்கரம், ஆபரணம் கௌஸ்துவமணி, வாகனம் கருடன், வசிக்குமிடம் கடல்; சிவபெருமானுக்குக் கறி பிள்ளை, உணவு விஷம், ஆயுதம் மான், பூஷணம் சர்ப்பம், வாகனம் ரிஷபம், வசிக்குமிடம் கைலை. எ-று. (அளை-வெண்ணெய், கடு-விஷம், கு-பூமி, மறி-மான், திகிரி-சக்கரம், ஏறு-ரிஷபம், புள்-கருடன், கல்-கைலை மலை, தாழம் X தாழ்அம் = தாழ்ந்தநீர்-சமுத்திரம். சொற்களை மாற்றிச் சேர்த்துப் பொருள் கொள்ளவேண்டும்.) (126)

ஒரு வண்ணனை மெச்சியது.

சிரம்பார்த்தா னீசனயன் றேவிதனைப் பார்த்தான்
கரம்பார்த்தான் செங்கமலக் கண்ணன்—உரஞ்சேர்
மலைவெளுத்த திண்புயத்து வண்ணான்ஸ்ரீ ராமன்
கலைவெளுத்த நேர்த்திதனைக் கண்டு.

இ-ள். பலமுடைய மலையும் பார்த்து நாணி வெளுத்த பலம் பொருந்திய புயத்தையுடைய ஸ்ரீராமனெனும் பெயருடைய வண்ணான் வஸ்திரம் வெளுத்துக்கொடுத்த நேர்த்தியைப்பார்த்து, சிவன் நெற்றியிலணிந்திருக்கும் நீற்றின் நிறம் இதற்கீடாகுமாவென்று தலையைப் பார்த்தான்; பிரம்மா சரஸ்வதியின் நிறம் இதற்கீடாகுமாவென்று தன் மனைவியைப் பார்த்தான்; சிவந்த தாமரை

மலரைப்போன்ற கண்களுடைய விஷ்ணு தன்னுடைய சங்கின் நிறம் இதற்கிடாகுமாவென்று அச்சங்கைத்தாங்கிய கையைப் பார்த்தான். எ-று. (127)

ஒரு வித்வான் ஒரு மன்னனைப் புகழ்ந்து பாடியது.

ஒருபாதி மால்கொள மற்றொரு பாதி யுமையவள்கொண்
டிருபாதி யாலு மிறந்தான் புராரி யிருநிதியோ
பெருவா ரிதியிற் பிறைவானிற் சர்ப்பம் பிலத்திற்கற்ப [னே.
தருவான போஜ கொடையுன்கை யோடொன்கை தந்தன

இ-ள். கொடையிற் கற்பகத் தருவை நிகர்ந்த போஜனே! ஒரு பாகத்தை விஷ்ணு கொள்ளவும், மற்றொரு பாகத்தை உமைய வள் கொள்ளவும் அவ்வாறு பிரிந்துபோன இரண்டு பாகத்தாலும் திரிபுர சம்மார கர்த்தனான சிவன் இறந்துபோயினான்; அவ னுடைய பெரிய நிதி சமுத்திரத்திலும், சந்திரன் வானத்திலும், ஆதிசேடன் பாதாளத்திலும் புகுந்தன; அவன் கொடைத் தன்மையை உன் கையிலும், தன் கையிலேந்திய ஓட்டை என் கையிலும் கொடுத்தனன். எ-று. (128)

விநாயகர் நிந்தாஸ்துதி.

கம்பமத கடக்களிற்றான் றில்லைவாழுங் கணபதிதன் பெருவயிற்றைக் கண்டு வாடி, யும்பரெலாம் விழித்திருந்தா ரயில்வேற் செங்கை யுடையவறு முகவனுங்கண் ணீரா றானன், பம்புசுடர்க் கண்ணனுமோ நஞ்சுண் டான்மால் பய மடைந்தா னுமையுமுடல் பாதியானாள், அம்புவியைப் படைத்திடுவ தவம தேயென் றயனுமன்ன மிரங்காம லலை கின் றானே.

இ-ள். கட்டுத் தறியிற் கட்டப்படுகின்ற மதம் பாயும் கதுப்பினை யுடைய யானை முகமுடையவன், திருத்தில்லையில் அமரும் கண பதியினுடைய பெரு வயிற்றைப் பார்த்துப் பயந்து, தேவர்களெல் லோரும் இமையாதிருந்தார்கள்; வேலாயுதத்தைத் தாங்கிய

சிவந்த கையையுடைய ஆறுமுகன் கண்ணீராறுனன்; பொருந்திய அக்கினிக் கண்ணையுடைய சிவன் விடத்தையுண்டான்; மகா விஷ்ணு பயமடைந்தான்; உமாதேவியும் தேகம் பாதியானள்; பிரம்மா உலகத்தைப் படைத்திடுதல் வீணென்று அன்னத்தை விட்டிறங்காமல் அலைகின்றான். எ-று.

(தேவர்கள் இமையாதிருத்தல் இயல்பு; முருகன் கண் ஈராறு-பனிரண்டு பெற்றிருத்தல் இயல்பு; சிவன் விடத்தை யுண்டது இயல்பு; பயம்-ஜலம்; அந்த ஜலரூபமான கடலை விஷ்ணு அடைந்திருத்தல் இயல்பு; உமை சிவனிடம் பெற்ற பாதியுடல் போகப் பாதியுடலோடிருத்தல் இயல்பு; பிரமா எப்போதும் அன்னவாகனத்திலிருத்தல் இயல்பு; இவற்றை, கணபதியின் பெரு வயிற்றைப் பார்த்துத் தேவர் கண்மூடாதிருந்ததாகவும், முருகன் கண்ணீர் ஆறாகப் பெருக்கினதாகவும், சிவன் விடமுண்டதாகவும், விஷ்ணு பயமுற்றதாகவும், உமை பாதி யுடம்பாய்ப் போனதாகவும், பிரமா அன்னத்தை விட்டிறங்காதிருந்ததாகவும் சிலேடையாகக் கூறினர் ஆசிரியர். (129)

காமத்தின் கொடுமை.

காமமே குலத்தினையும் நலத்தினையும் கெடுக்கவந்த களங்க மாகும், காமமே தரித்திரங்க ளனைத்தினையும் புகட்டி வைக்குங் கடார மாகும், காமமே பரகதிக்குச் செல்லாமல் வழியடைக்குங் கபாட மாகும், காமமே யனைவரையும் பகையாக்கிக் கழுத்தரியுங் கத்தி தானே.

இ-ள். பெண்கள் மயக்கமாகிய காமமே ஜாதி நெறியையும் நன்மையையும் கெடுத்துவிட வந்த குற்றமாகும்; காமமே வறுமைகளையெல்லாம் நிறைத்து வைத்திருக்கும் கொப்பரையாகும்; காமமே மேலான கதியாகிய முத்திமார்க்கத்திற் செல்லாமல் வழியை அடைக்குங் கதவாகும்; காமமே அனைவரையும் பகையாக்கிக் கழுத்தறுக்கத்தக்க வாளாயுதமாம் எ-று. (130)

விபசாரியின் குணக்கேடு.

தடாரி தண்ணுமை பேரிகை சல்லரி யிடக்கை
கடார மெங்கணு மதிர்ந்துமே ஒலித்திடல் காணில்
விடாத நாணகன் றன்னிய புருடனை விளித்தே
அடாது செய்தமங் கையரிய லொலித்தல்போ லாமே.

இ-ள். பம்பை, மத்தளம், பேரிகை, சல்லரி, இடக்கை, நகரா முதலிய வாத்தியங்க ளதிர்ந்து சப்தித்தலை ஆராய்ந்து பார்த்தால், அது விடக்கூடாத வெட்கம் நீங்கி அன்னிய நாயகனை இச்சித்துக் கூப்பிட்டுப் பொருந்தாத காரியத்தைச் செய்த பெண்களினது இயற்கைக் குணங்கள் சப்தித்தலைப்போலாம். எ-று. (131)

யாத்திரை செல்வோன் செய்யத்தக்கன.

தண்டுல மிளகின் றாள்புளி யுப்பு
தாளிதம் பாத்திரம் வடகம்
தாம்புநீ ரளக்கு மூன்றுகோ லாடை
சக்கிமுக் கியுடன்கை ராந்தல்
கண்டக மாடி பூசையின் பொருள்கள்
கழல்குடை யேவல்சிற் றுண்டி
கம்பளி யூசி நூலடைக் காய்ப்பை
கரண்டகங் கண்ட முப்பதனில்
துண்டமூ றியகாய் கரண்டிநல் லெண்ணெய்
துட்டுடன் பூட்டுநற் கத்தி
சொல்லிய வெல்லாங் குறைவறத் திருத்தித்
தொகுத்துப்பற் பலவினு மமைத்துப்
பெண்டுக டுணையோ டெய்துவா கனமுப்
பெருநிலை நீர்நிழல் விறகு
பிரஜையுந் தங்கு மிடஞ்சமைத் துண்டு
பின்செலல் யாத்திரைக் கழகே.

இ-ள். பிரயாணஞ் செல்லுமொருவன் அரிசி, மிளகுப்பொடி, புளி, உப்பு, தாளிதப் பதார்த்தம், தாளிதப் பாத்திரம், கறிவடகம், கயிறு, தண்ணீர் அளவறிய ஊன்றுகோல், வஸ்திரங்கள், சக்கி முக்கி அல்லது நெருப்புண்டாக்குங் கருவி, கைராந்தல், அரிவாள், கண்ணாடி, பூஜைக்குரிய சாமான்கள், பாதரட்சை, குடை, வேலையாள், சிற்றுணவு, அல்லது பலகாராதிகள், கம்பளி, ஊசி, நூல், வெற்றிலைபாக்கு வைக்கும்பை, கரண்டகம், எழுத்தாணி, உப்பில் ஊறிய ஊறுகாய்த்துண்டு, கரண்டி, நல்லெண்ணெய், துட்டு, பூட்டு, கத்தி ஆகிய இவை முதலாகச் சொல்லப்பட்டவைகளெல்லாம் குறைவில்லாமல் திருத்தத்தோடு பலவகைகளிலுஞ் சேகரித்து இன்னும் பற்பல பொருள்களையும் தேடி அமைத்துக்கொண்டு ஸ்திரீகள் துணையோடு ஏறும்படியான வாகனமுடையவனாய்ப் பெருத்த நீர் நிலை நல்ல நிழல் விறகு ஜனங்கள் இருக்கும் இடம் கண்டு தங்கிச் சமைத்துண்டு பின்பு பிரயாணஞ்செய்தல் யாத்திரைக் கழகாம். எ-று. (132)

எல்லாவற்றிலும் அரிது இன்னதென்பது.

மக்க ளாக்கையிற் பிறத்தலே யரிதுமற் றதிலும்
துக்க கூன்குரு டூமையைத் துறத்தலு மரிதே
நற்கு லத்திடை வருதலு மரிதுஞா னத்தான்
முக்க ணீசனுக் காட்படல் முற்றிலு மரிதே.

இ-ள். மனித சரீரத்தில் மக்களாகப் பிறத்தல் அரியதாகும்; அதிலும் துக்கம் பொருந்திய கூன், குருடு, ஊமை முதலிய அவயவக் குறைவுகளை நீக்கிப் பிறத்தல் அரியதாகும்; அப்படிப் பிறந்தோர்களிலும் நல்ல குலத்தில் உதித்தல் அரிது; எல்லாவற்றைக் காட்டினும் ஞானத்தால் திரிநேத்திரங்களையுடைய ஈஸ்வரனுக்கு ஆட்படல் அரியதாகும். எ-று. (133)

விவேகசிந்தாமணி மூலமும் உரையும் முற்றிற்று.

P. R. Rama Iyar & Co., Printers, Madras